# நடப்பு நிகழ்வுகள் - ஜூன் - (1 - 30), 2021


| வ.எண் | தலைப்புகள் | ப.எண். |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 3 |
| 2 | மாநிலம் | 13 |
| 3 | தேசிய செய்திகள் | 14 |
| 4 | நீதிமன்ற தீர்ப்புகள் | 21 |
| 5 | சர்வதேச செய்திகள் | 22 |
| 6 | இந்தியா மற்றும் இதர நாடுகள் | 24 |
| 7 | மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 25 |
| 8 | பாதுகாப்பு | 26 |
| 9 | பொருளாதாரம் | 28 |
| 10 | தரவரிசைப் பட்டியல் | 30 |
| 11 | நியமனங்கள் | 31 |
| 12 | விருதுகள் | 32 |
| 13 | புத்தகங்களும் ஆசிரியர்களும் | 33 |
| 14 | புகழ்பெற்ற நபர்கள் | 33 |
| 15 | அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல் | 34 |
| 16 | விளையாட்டுகள் | 35 |
| 17 | நினைவில் நின்றவர்கள் | 36 |
| 18 | அறிக்கைகள் | 37 |
| 19 | முக்கிய தினங்கள் | 38 |

# தமிழ்நாடு

- **குழந்தை உரிமைகளும் நீங்களும் (Child Rights and You -CRY)**
  - ✓ குழந்தை உரிமைகளும் நீங்களும் (CRY) என்ற ஒரு அரசு சாரா நிறுவனம், சேலம், தர்மபுரி, இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் 10 ஊராட்சி ஒன்றியங்களிலும், 72 பழங்குடியினர் கிராமங்களிலும் குழந்தைத் திருமணங்கள் 40 விழுக்காடு அதிகரித்து விட்டன என்று ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
  - ✓ மே 2020ல், இந்த மாவட்டங்களில் 98 குழந்தைத் திருமணங்கள் நடந்துள்ளன. ஆனால் இதே காலகட்டத்தில் 2019ஆம் ஆண்டில் 60 குழந்தைத் திருமணங்களே நடந்துள்ளன.

- **தமிழ்நாடு அரசு – 'அனைவருக்கும் தேர்ச்சி'யை அறிவிக்க முடிவு செய்தது**
  - ✓ ஆர்டிஇ (கல்வி உரிமைச் சட்டம்) சட்டத்தின்படி, தொடக்கப்ப பள்ளியை நிறைவு செய்வதற்கு முன்பாக எந்த ஒரு குழந்தையையும் எந்த வகுப்பிலும் நிறுத்தி வைக்கக் கூடாது அல்லது பள்ளியை விட்டு வெளியே அனுப்பபக் கூடாது. இந்தச் சட்டத்தின்படி, அனைத்துப் பள்ளிகளிலும் அனைத்து வகுப்புகளிலும் பயிலும் அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றவர்களாக அறிவிக்கப்பட வேண்டும்.

- **ஜீனோம் வரிசைப்படுத்துதல்**
  - ✓ தமிழ்நாடு பொது சுகாதார ஆய்வுக்கூடம் - ஜுன் மாதக் கடைசியில் நமது மாநிலத்திற்காக ஒரு ஜீனோம் வரிசைப்படுத்துதல் ஆய்வுக்கூடத்தை அமைக்க உள்ளது.

- **முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் 98வது பிறந்த நாள்**
  - ✓ தமிழ்நாடு அரசு - முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் 98வது பிறந்த தினத்தைப் போற்றும் வகையில் இலக்கியம், சுகாதார பாதுகாப்பு, கட்டமைப்பு மற்றும் வேளாண்மை ஆகிய துறைகளில் ஆறு அறிவிப்புகளை வெளியிட்டது.
  - ✓ தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் மூன்று தமிழ் எழுத்தாளர்களுக்கு 'இலக்கிய மாமணி' விருதை வழங்க உள்ளது.
  - ✓ இந்த விருது ரூ.5 இலட்சம் ரொக்கத்தையும் ஒரு பாராட்டுப் பத்திரத்தையும் உள்ளடக்கியதாகும்.
  - ✓ மதுரையில் இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் ரூ.70 கோடி செலவில் கலைஞர் நினைவு நூலகம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.
  - ✓ முன்னதாக, முதலமைச்சர் அவர்கள் மே மாதத்தில் தன்னுடைய முதல் பணி நாளில் பெண்களுக்கான 'இலவச பயண' திட்டத்தை அறிவித்தார்.

- **தமிழ்நாடு – நித்தி ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் அட்டவணையில் 2019-20ஆம் ஆண்டில் மூன்றாவதுஇடத்தில் இருந்தது, 2020-21ஆம் ஆண்டில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.**
  - ✓ ஜுன் 3 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, தமிழ்நாடு ஒட்டு மொத்தமாக 74 புள்ளிகளைப் பெற்று, 75 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்த கேரளாவிற்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
  - ✓ 'ஏழ்மை இல்லாத நிலை' மற்றும் 'குறைந்த செலவில் தூய்மையான ஆற்றல்' என்ற தலைப்புகளில் முதலிடத்தைப் பிடித்திருந்த தமிழ்நாடு, 'தொழில், கண்டுபிடிப்புகள் மற்றும் கட்டமைப்பு இலக்கு'களில் இரண்டாவது இடத்தைப் - பிடித்தது.

- ✓ நமது மாநிலம் ‘நல்ல சுகாதாரம் மற்றும் நல்ல உடல்நலம்’ என்ற தலைப்பில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருந்தது மற்றும் மருத்துவமனைகளில் பிரசவம் என்பதில் 99.9 விழுக்காடு மதிப்பைப் பெற்று இலக்கை எட்டும் அளவுக்கு நெருங்கியுள்ள ஐந்து மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
- ✓ ‘தரமான கல்வி’ மற்றும் ‘ கௌரவமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி’ என்ற தலைப்புகளில் நமது மாநிலம் சிறப்பாகச் செயல்பட்டு ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது. பாலின சமத்துவத்தில் நமது மாநிலம் நான்காவது இடத்தில் உள்ளது.

➢ **ஆர். பூர்ணலிங்கம் என்ற ஐஏஎஸ் அதிகாரி தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பணிக் குழு அமைக்கப்பட்டது.**

- ✓ கோவிட்-19 தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது.
- ✓ இந்தக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது காலமுறையில் கூட்டத்தை நடத்தும்.

➢ சென்னைக்கு அருகில் உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஒன்பது வயதான பெண் சிங்கம், கொரோனா வைரஸ் என்று சந்தேகிக்கப்படும் தொற்று காரணமாக ஜூன் மாதம் உயிரிழந்தது.

➢ **நீதியரசர் ஏ.கே. ராஜன் - நீட் தேர்வின் தாக்கம்**

- ✓ ஜூன் மாதத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் - மருத்துவக் கல்வி நுழைவுக்காக நடத்தப்படும் நீட் தேர்வின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையிலான ஒரு குழுவை அமைத்தார்.

➢ **இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை, தன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களைப் பற்றியும் அவற்றின் சொத்து ஆவணங்களையும் டிஜிட்டல்மயமாக்கி சேமிப்பதற்காக எல்காட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.**

- ✓ இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை, இந்தப் பணியை தமிழ்நாடு மின்ஆளுகை முகமையின் (Tamil Nadu e-Governance Agency) உதவியுடன் செய்து வருகிறது.
- ✓ டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஆவணங்கள் சென்னை, பெருங்குடியில் உள்ள எல்காட் நிறுவனத்திலும், திருச்சியில் உள்ள தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையத்திலும், புனேயில் உள்ள தேசிய தகவலியல் மையத்திலும் சேமிக்கப்படும்.

➢ **தமிழ்நாடு – மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு (Tamilnadu -State Development Policy Council - SDPC)**

- ✓ **தலைவர்-** திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு முதலமைச்சர்.
- ✓ **துணைத்தலைவர்** - டாக்டர். ஜெ. ஜெயரஞ்சன்
- ✓ **முழுநேர உறுப்பினர்** - பேராசிரியர். சீனிவாசன்

| **பெயர்** | **துறை** |
|---|---|
| எம். விஜயபாஸ்கர் | பேராசிரியர், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம். |
| கே. தீனபந்து | ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி |
| டாக்டர். சுல்தான் அகமது இஸ்மாயில் | இயக்குநர், சுற்றுச்சூழல் அறிவியல் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் முன்னாள் துறைத்தலைவர், உயிர் தொழில்நுட்பவியல் துறை, புதுக் கல்லூரி, |

| | |
|---|---|
| | சென்னை. |
| டாக்டர்.ஜி. சிவராமன் | சித்த மருத்துவர் |
| நர்த்தகி நடராஜ் | பரதநாட்டியக் கலைஞர் |
| மல்லிகா சீனிவாசன் | டிராக்டர்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் |
| டாக்டர். டி.ஆர்.பி. ராஜா | சட்ட மன்ற உறுப்பினர் |
| டாக்டர். ஜெ. அமலோர்பவநாதன் | ஓய்வுபெற்ற மருத்துவர் |

- **தமிழ்நாடு – ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட செயல்திறனுக்கான தரவரிசை அட்டவணையில் (Performance Grading Index) 3வது இடத்தைப் பிடித்துள்ளது.**

- **குடிமக்கள் சதுக்கம் (Citizen's Corner)**
  - ✓ பேரிடர் காலங்களில் பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் நிலவும் உண்மை நிலை மற்றும் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக, தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் - வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய ஒரு உதவி எண்ணை (வாட்ச் ஆப் எண்) தொடங்கி வைத்துள்ளது.

- **கீழடி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் 7ஆம் கட்ட அகழ்வாய்வுப் பணிகள் ஜூன் மாதத்தில் மீண்டும் தொடங்கின.**
  - ✓ இந்த ஏழாம் கட்ட அகழ்வாய்வில், எலும்புகளுடன் கூடிய அடக்கம் செய்யும் பானைகள், ஒரு கனசதுர டெரகோட்டா பகடை, கரும் சிவப்பு மண்பாத்திரம் ஆகியவற்றுடன், தங்க ஆபரணங்களும் ஏப்ரல் 2021 மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்டன.

- **தமிழ்நாடு அரசு –** மருத்துவக் கல்லூரிகளில் சேர்வதற்காக நடத்தப்படும் நுழைவுத் தேர்வின் தாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காக, ஓய்வுபெற்ற நீதிபதி நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையிலான ஒன்பது உறுப்பினர் குழு ஒன்றை அமைத்தது.

- **தமிழ்நாடு –** உயர் கல்வியில் 51.4 விழுக்காடு என்ற ஒட்டுமொத்த சேர்க்கை வீதத்தை (gross enrolment ratio) எட்டியுள்ளது. இது தேசிய சராசரியாகிய 27.1 விழுக்காட்டைவிட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு ஆகும்.
  - ✓ இது ஜூன் 10ஆம் தேதி வெளியிடப்பட்ட 2019-20ஆம் ஆண்டுக்கான அனைத்து இந்திய உயர் கல்வி சர்வே (All-India Survey on Higher Education) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - ✓ மேலும், தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த சேர்க்கை வீதமானது, 2030ஆம் ஆண்டில் எட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேசிய இலக்காகிய 50 விழுக்காட்டை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

- **மதிப்பீட்டு அளவுகோலை முடிவு செய்வதற்காக 10 உறுப்பினர் குழு**

| பெயர் | துறை |
|---|---|
| 1. காகர்லா உஷா | பள்ளிக் கல்வித்துறை செயலாளர் |
| 2. டி. கார்த்திகேயன் | உயர்கல்வித் துறை செயலாளர் |
| 3. கே. நந்தகுமார் | பள்ளிக் கல்வித் துறை ஆணையர் |
| 4. திரு.எஸ். கௌரி | சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தர் |
| 5. சி. உஷாராணி | அரசு தேர்வுகள் இயக்குநர் |

| | |
|---|---|
| 6. என். லதா | இயக்குநர் - கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநில கவுன்சில் (State Council for Education Research and Training) |
| 7. எஸ். கருப்பசாமி | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் |
| 8. ஏ ஸ்டெல்லா அமலோர்பவ மேரி | தலைமை ஆசிரியர் - திருப்பூர் (அரசுப் பள்ளி) |
| 9. யு. கணேசன் | தலைமை ஆசிரியர் - திருநெல்வேலி (அரசு உதவி பெறும் பள்ளி) |
| 10. எச். ஜேம்ஸ் சத்தியராஜ் | தலைமை ஆசிரியர் - சென்னை (தனியார் பள்ளி) |

- **முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் -** டெல்லி உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி நீதியரசர் டி. முருகேசன் தலைமையிலான ஒரு ஆணையத்தை அமைத்து உத்தரவிட்டார்.
  - ✓ இந்த ஆணையம் பொறியியல், வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் சட்டம் போன்ற தொழில்முறை படிப்புகளில் அரசுப் பள்ளி மாணவர்களின் குறைந்த அளவு சேர்க்கைக்கான காரணத்தை ஆய்வு செய்யும்.
  - ✓ முன்னதாக, மருத்துவக் கல்லூரி சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை மாநில அரசு கடந்த ஆண்டு அறிமுகம் செய்தது.
  - ✓ இந்த ஆணையம், அரசுப் பள்ளி மாணவர்கள் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளைக் கண்டறிவதற்காக, அவர்களது சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியை ஆய்வு செய்யும்.
  - ✓ தொழில்முறைப் படிப்பு மாணவர் சேர்க்கையில் அரசுப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது என்று கருதினால், இந்த ஆணையம் அதற்கான தீர்வுகளை பரிந்துரைக்கும்.
  - ✓ இந்த ஆணையம் தன்னுடைய அறிக்கையை இன்னும் ஒரு மாதத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்கும்.

- **ஜல்ஜீவன் இயக்கத்தின்கீழ், ஒன்றிய அரசு ரூ.3,691 கோடியை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது**
  - ✓ ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு முதல் தவணையாக ரூ.614.3 கோடி தொகையை விடுவித்துள்ளது.
  - ✓ பிரதமர் நரேந்திர மோடியால் 2019ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட இந்த இயக்கமானது, 2024க்குள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் குழாய் குடிநீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - ✓ இப்போதைக்கு, தமிழ்நாட்டில் இன்னும் 88.8 இலட்சம் குடும்பங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் குழாய் குடிநீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும்.
  - ✓ இதற்காக 2020-21ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 16.1 இலட்சம் எண்ணிக்கை ஆகும்.

- ஜல்ஜீவன் இயக்கம் 2019ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது
  - ✓ தமிழ்நாட்டில் 21.6 இலட்சம் ஊரக குடும்பங்களுக்கு குழாய் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.
  - ✓ 70 விழுக்காடு ஊரகப் பகுதி குடும்பங்கள் குடிநீர் குழாய் இணைப்பைப் பெறாமல் உள்ள 18 மாவட்டங்களின்மீது கவனத்தைச் செலுத்துமாறு ஒன்றிய அரசு மாநில அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.
  - ✓ அவை சேலம், விருதுநகர், திருவண்ணாமலை, கடலூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், மதுரை, சிவகங்கை, நாகப்பட்டினம், தூத்துக்குடி,

புதுக்கோட்டை, தர்மபுரி, திருப்பூர், கள்ளக் குறிச்சி, தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் ஈரோடு ஆகும்.

- ✓ குடிநீர் குழாய் இணைப்பு இல்லாத 75 விழுக்காட்டிற்கும் அதிகமான குடும்பங்களைக் கொண்ட 15 மாவட்டங்களில் நீலகிரியும் ஒன்றாகும்.
- ✓ தமிழ்நாட்டிற்கு ரூ.4,068.7 கோடி ஒன்றிய அரசின் உறுதியான மானியம் கையிருப்பாக உள்ளது. இதில் ரூ.3,691.2 கோடி ஒன்றிய அரசின் ஒதுக்கீடும், ரூ.377.5 கோடி கடந்த நிதியாண்டின் இறுதியில் செலவழிக்கப்படாத தொகையும் அடங்கும்.
- ✓ இந்த ஆண்டிற்கு மாநில அரசின் இணையான பங்குத் தொகை ரூ.4,359.5 கோடி ஆகும். இதில் கடந்த நிதியாண்டின் பற்றாக்குறையான ரூ.290.8 கோடியும் அடங்கும்.
- ✓ இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசிடம் உள்ள உறுதியான கையிருப்பு மொத்தத் தொகை ரூ.8,428.2 கோடி ஆகும்.

## ➢ ‘செடிபுட்டா’ (ChediPutta) – புவிசார் அடையாளக் குறியீடு

- ✓ தமிழ்நாடு – செயற்கைப் பட்டு மற்றும் பருத்தி கலப்பு துணியில் செய்யப்படும் புகழ்பெற்ற ‘செடிபுட்டா’ கைத்தறி புடவைக்கு புவிசார் குறியீடு கேட்டு தமிழ்நாடு அரசு விண்ணப்பித்துள்ளது.
- ✓ ‘செடி’ என்பது தாவரத்தையும், ‘புட்டா’ என்பது புடவையின் ஓரத்தில் அமைக்கப்படும் பள்ளுவைக் குறிக்கும் (புடவை கடைசியில்)
- ✓ செடிபுட்டா என்பது திருநெல்வேலி மாவட்டத்தின் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள வீரவநல்லூர் மற்றும் புதுக்குடி, காருகுறிச்சி மற்றும் வெள்ளங்குடி போன்ற அருகாமை கிராமங்களில் நெய்யப்படும் ஒரு பாரம்பரிய கைத்தறி புடவை வகையாகும்.
- ✓ இதுவரை சுமார் 40 கைவினைப் பொருட்கள் மற்றும் வேளாண் பொருட்களுக்கு தமிழ்நாடு அரசு புவிசார் குறியீட்டினைப் பெற்றுள்ளது.
- ✓ புவிசார் குறியீடு கிடைக்கப்பெற்றுள்ள சில பொருட்கள் - காஞ்சிபுரம் பட்டு, தஞ்சாவூர் வீணை, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, திண்டுக்கல் பூட்டு. மதுரை சுங்குடி புடவை, சேலம் வெள்ளை பட்டு வேட்டி.
- ✓ இந்தியாவில் சுமார் 320 புவிசார் குறியீடு பெற்ற பொருட்கள் உள்ளன. 50 பொருட்களைக் கொண்டு கர்நாடகா அரசு இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

## ➢ முதலமைச்சரின் முதலாவது புதுடெல்லி பயணம்

- ✓ தமிழ்நாட்டிற்காக பல்வேறு துறைகளின் 25 கோரிக்கைகள் அடங்கிய ஒரு கோரிக்கை மனுவை முதலமைச்சர் பிரதமரிடம் வழங்கினார்.
- ✓ நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு மற்றும் தலைமைச் செயலாளர் வி. இறையன்பு ஆகியோரும் அப்போது உடனிருந்தனர்.
- ✓ அந்தக் கூட்டத்தின்போது வலியுறுத்தப்பட்ட முக்கிய விஷயங்கள் - சென்னை-சேலம் பசுமை விரைவு வழிச்சாலைத் திட்டத்தைக் கைவிடுதல், நீட் மற்றும் அதுபோன்ற நுழைவுத் தேர்வுகளைக் கைவிடுதல், செங்கல்பட்டு எச்எல்எல் உயிர் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் குன்னூர் பாஸ்டியர் நிறுவனத்தில் தடுப்பூசி மருந்து உற்பத்தியைத் தொடங்குதல்

## ➢ முதலமைச்சர் டெல்டா விவசாயிகளுக்காக திட்டத்தை அறிவித்தார்

- ✓ மூன்றாண்டு காலத்திற்குப் பிறகு இந்தத் தொகுப்பு மாநில அரசால் அறிவிக்கப்படுகிறது.

- ✓ ரூ.61.09 கோடி செலவில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம் 2.07 இலட்சம் விவசாயிகளுக்குப் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ இந்தத் திட்டம் காவேரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உள்ளீடுகளையும், கருவிகளுக்கான மானியத்தையும் வழங்கும் என்று அரசின் அறிவிப்பு குறிப்பிடுகிறது.
- ✓ விவசாயிகளுக்கு பண்ணைக் கருவிகளை வாங்குவதற்காக ரூ.50 கோடி மானியமாக வழங்கப்படும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அதே வேளையில், பண்ணைக் குட்டைகள் போன்று செம்மையான வகையில் தண்ணீரை சிறப்பாகப் பயன்படுத்துவதற்காக மேலும் ரூ.11.09 கோடி வழங்கப்படும்.
- ✓ இந்தத் திட்டம் தஞ்சாவூர். நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் முழுமையாகவும் கடலூர், அரியலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பகுதியாகவும் செயல்படுத்தப்படும்.
- ✓ வழக்கமாக, குறுவை சாகுபடியானது டெல்டா மாவட்டங்களில் 3.2 இலட்சம் ஏக்கரில் மேற்கொள்ளப்படும்.
- ✓ நெல் விதைகள், செயற்கை மற்றும் உயிர் உரங்கள், மற்றும் இதர உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் போதுமான அளவு வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு வேளாண்மைத் துறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## ➢ ஆளுநர் உரையின் முக்கிய அம்சங்கள்

- ✓ ஆளுநர் இந்திய அரசை 'ஒன்றியம்' என்று குறிப்பிட்டார், எங்கேயும் 'மைய அரசு' என்று குறிப்பிடவில்லை. அவர் மாநில அரசின் 'கூட்டாட்சி' நிலையை பிரதிபலிக்கிறார் என்பதை இது உணர்த்துகிறது.
- ✓ மாநிலத் தலைநகரில் நவீன தொழில்நுட்பம் அடிப்படையிலான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக சிங்காரச் சென்னை 2.0 தொடங்கி வைக்கப்படும்.
- ✓ மாநிலத்தின் பெரிய நகரங்களில் மக்கள் அடர்த்தியைக் குறைப்பதற்காக, புறநகர்ப் பகுதிகளில் நவீன வசதிகளுடன் செயற்கைக் கோள் நகரங்கள் ஏற்படுத்தப்படும்.
- ✓ அரசு முகமைகளால் பல்வேறு சேவைகள் முறையாகச் செய்யப்படுவதை உறுதிப் படுத்துவதற்காக சேவைகள் உரிமைச் சட்டம் கொண்டுவரப்படும்.
- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மீதான புகார்களை விசாரிப்பதற்காக லோக்ஆயுக்தா அமைப்பு மேலும் வலுப்படுத்தப்படும்.
- ✓ மாநில அரசு தொழில்துறையில் பின்தங்கியுள்ள வட மாவட்டங்களை மேம்படுத்துவதற்கும், சென்னை - கன்னியாகுமரி தொழில்பாதை மற்றும் சென்னை-பெங்களூர் தொழில்பாதையை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கும்.
- ✓ முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட உழவர் சந்தைகளுக்கு புத்துயிர் அளிக்கப்படும், இத்தகைய மேலும் பல சந்தைகள் தோற்றுவிக்கப்படும்.
- ✓ நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையிலான குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதும், மருத்துவ நுழைவுத் தேர்வை கைவிடுவதற்கான ஒரு சட்டத்தை இந்த அரசு நிறைவேற்றும்.
- ✓ மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் வெகுஜன விரைவு போக்குவரத்து அமைப்பு (**Mass Rapid Transit System**) ஏற்படுத்தப்படும்.

## ➢ தமிழ்நாடு பொருளாதார ஆலோசனைக் கவுன்சில் - இதில் இடம் பெற்றிருப்பவர்கள்

- ✓ நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் எஸ்தர் டஃப்ளோ
- ✓ இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன்

- ✓ ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார முதன்மை ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன்
- ✓ டெல்லி பொருளாதாரப் பள்ளியின் பொருளாதார வளர்ச்சி பேராசிரியர் ஜீன் டிரீஜி மற்றும் முன்னாள் ஒன்றிய நிதிச் செயலாளர் எஸ். நாராயணன்

➢ **திருவாரூர் மாவட்டத்தில் உள்ள காட்டூர்**

- ✓ தகுதியுள்ள அனைத்து பெரியவர்களுக்கும் 100 விழுக்காடு தடுப்பூசி (குறைந்தபட்சம் ஒரு டோசாவது) வழங்கிய தமிழ்நாட்டின் முதல் கிராமம் என்ற பெயரைப் பெற்றுள்ளது.
- ✓ இந்த மாதத்தில் இதற்கு முன்பாக ஜம்மு காஷ்மீரின் பண்டிபோரா மாவட்டத்தில் உள்ள வெயான் என்ற கிராமம், நாட்டில் உள்ள கிராமங்களிலேயே அனைத்து மக்களுக்கும் கோவிட்-19க்கு எதிராக தடுப்பூசி வழங்கிய முதல் கிராமம் என்ற பெயரைப் பெற்றுள்ளது.

➢ **தமிழ்நாடு சட்ட மன்றம் - மூன்று சட்டத்திருத்தங்களை நிறைவேற்றி விட்டு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.**

- ✓ தமிழ்நாடு நிதி பொறுப்புடைமை சட்டம் 2003 – வருவாய் பற்றாக்குறையை நீக்குவதறகும், நிதி பற்றாக்குறையை மாநில ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 விழுக்காடு அளவுக்கு குறைப்பதற்குமான கால வரம்பை 31.03.2024 வரை நீட்டிப்பதற்காக திருத்தம் செய்யப்பட்டது.
- ✓ 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

➢ **‘ISAC-2020 – இந்திய சீர்மிகு நகரங்கள் விருதுக்கான போட்டி (Indian Smart Cities Award Contest)**

- ✓ பெருநகர சென்னை மாநகராட்சி – சீர்மிகு நகரங்கள் இயக்கத்தின் ‘ISAC-2020 – இந்திய சீர்மிகு நகரங்கள் விருதுக்கான போட்டி’யின் ஆறாவது ஆண்டு விருதுப் போட்டிகளில் இரண்டு விருதுகளை வென்றது.

➢ **மு.க. ஸ்டாலின் - எதிர்வரும் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் வெல்லும் விளையாட்டு வீரர்களுக்கு ரூ.3 கோடி பரிசுத் தொகை ரொக்கமாக வழங்கப்படும் என்று அறிவித்தார்.**

- ✓ சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு ரூ.25 இலட்சம் அரசால் வழங்கப்பட்டது.
- ✓ 2020 கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 23 முதல் ஆகஸ்ட் 8, 2021 வரை ஜப்பானில் நடைபெற உள்ளன. கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக இந்தப் போட்டிகள் கடந்த ஆண்டு நடைபெறாமல் ஒத்தி வைக்கப்பட்டன.
- ✓ நேத்ரா குமணன், வருண் தக்கார் மற்றும் கே.சி. கணபதி (படகுப் போட்டி), ஜி. சத்தியன் மற்றும் ஏ. சரத் கமல் (டேபிள் டென்னிஸ்). சி.ஏ. பவானி தேசி (ஃபென்சிங்) மற்றும் உடல் ஊனமுற்ற விளையாட்டு வீரர் டி. மாரியப்பன் ஆகியோர் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில் தகுதிபெற்றுள்ளனர்.

➢ **சீரோ சர்வே (Sero Survey)**

- ✓ தமிழ்நாடு அரசு – ஜுன் மாதத்தில் மூன்றாவது சீரோ சர்வேயை எடுப்பதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளது.
- ✓ இந்த சீரோ சர்வேயானது, கோவிட்-19க்கு வெளிப்பட்டு, கொரோனா வைரசுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றுள்ள மக்களின் விழுக்காட்டை நிர்ணயம் செய்யும்.

- ✓ இந்த சர்வேயானது. தடுப்பூசிகளின் வாயிலாக தங்கள் உடலில் நோய் எதிர்ப்புத் திறனை வளர்த்துக்கொண்ட நபர்கள் மற்றும் இரண்டாவது அலையில் நோய் தாக்குதலுக்கு உள்ளான நபர்களின் எண்ணிக்கை மதிப்பீட்டை வழங்கும்.
- ✓ இந்த சர்வேயின் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதிலும் உள்ள 38 மாவட்டங்களில் இருந்தும் சுமார் 25,000 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படும்.
- ✓ இரண்டாவது சீரோ சர்வே பணிகள் ஏப்ரல், 2021ல் முடிக்கப்பட்டன.

➢ **தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் - சார்ஸ்கோ வி-2, கோவிட்-19 வைரஸ் பிறழ்வுகளின் தடத்தைக் கண்டறிவதற்காக முழு மரபணு வரிசைப்படுத்துதல் ஆய்வக வசதியை விரைவிலேயே பெற உள்ளது.**

- ✓ இந்த வைரசின் பிறழ்வுகளைக் கண்காணிப்பதற்காக பொது சுகாதார இயக்ககம், முழு மரபணு வரிசைப்படுத்துதல் ஆய்வகத்தை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளது.

➢ **சிறுபான்மையினர் நல ஆணையம் - தலைவர்**

- ✓ மூத்த காங்கிரஸ் தலைவர் எஸ். பீட்டர் அல்ஃபோன்ஸ், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

➢ **சி. சைலேந்திர பாபு – ஜுன் மாதத்தில் தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநராகவும் காவல் படையில் தலைவராகவும் நியமனம் செய்யப்பட்டார்.**

➢ **கூடங்குளம் அணு உலை – அலகுகள் 5 மற்றும் 6வது**

- ✓ கூடங்குளம் அணு அலை திட்டத்தில் 2000 மெகா வாட் (2 X 1000) திறன் கொண்ட 5வது மற்றும் 6வது உலைகள் கட்டும் பணி – கான்கிரீட்டைக் கொட்டி தொடங்கி வைக்கப்பட்டது.

➢ **15 முதுமக்கள் தாழிகள் - தூத்துக்குடி மாவட்டத்தின் சிவகங்கையில் உள்ள இரண்டு அருகாமை தொகுப்புகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டன.**

- ✓ மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சிவகலையில் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.
- ✓ சிவகலை தொகுப்புப் பகுதியின் கீழடி தொகுப்பில் கொந்தகையைப் போன்று சிவகலை ஒரு அடக்கம் செய்யும் இடமாக இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.
- ✓ இந்திய தொல்லியல் துறை இந்தத் தொகுப்பில் ஆறு இடங்களில் அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு தன்னுடைய அனுமதியை வழங்கியிருக்கிறது.
- ✓ சிவகலையில் இரண்டாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக, ரூ.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இதுவரை 2 முதல் 4 அடி உயரம் வரையிலான 40 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

➢ **தென் பெண்ணை – பாலாறு இணைப்புத் திட்டம் : அமைச்சர், துரைமுருகன்**

- ✓ தென்பெண்ணை – பாலாறு இணைப்புத் திட்டம் விரைவில் தொடங்கி வைக்கப்படும். இந்தத் திட்டம் முடிவடைந்தவுடன், பாலாறு ஆற்றில் தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு தண்ணீரின் ஓட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

## ➢ கள்ளச் சாராய விற்பனைக்கு எதிராக காவல்துறை 'ஆபரேஷன் விண்ட்' ஐ தொடங்கி வைத்துள்ளது

✓ கள்ளச் சாராயம் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வரும் நபர்களுக்கு எதிராக மாநில மது ஒழிப்பு மற்றும் அமலாக்க அலுவலர்கள் தீவிரமான தேடுதல் வேட்டையை நடத்தி வருகின்றனர். மாநில மது ஒழிப்பு மற்றும் அமலாக்க அதிகாரிகள் ஜுன் 8 முதல், 'ஆபரேஷன் விண்ட்' என்ற பெயரில் ஒரு சிறப்பு தேடுதல் வேடையைத் தொடங்கியனர்.

## ➢ 50.79 ஹெக்டேர் கல்லார் பாதை ஒரு தனி காடாக அறிவிக்கப்பட்டது.

✓ தமிழ்நாட்டின் மிகவும் முக்கியமான யானைகளின் வழித்தடங்களில் ஒன்றைப் பாதுகாக்கும் நோக்கத்தில், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் கல்லார் யானைகளின் வழித்தடத்தில் உள்ள 50.79 ஹெக்டேர் தனியார் நிலத்தை, தமிழ்நாடு தனியார் காடுகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தனி காடாக அறிவித்தார்.

## ➢ தமிழ்நாடு முதலமைச்சர் கோவிட்-19 நோய்த் தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிவாரண உதவிகளை அறிவித்தார்.

✓ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கோவிட் -19 பெருந்தொற்றால் தங்களது இரண்டு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் உதவித் தொகையை அறிவித்தார்.

## ➢ ஆசிய வளர்ச்சி வங்கியும் இந்தியாவும் தமிழ்நாடு தொழிற்துறை சாலை மேம்பாட்டிற்காக 3,548 கோடி கடனுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன

✓ ஆசிய வளர்ச்சி வங்கியும் ஒன்றிய அரசும், தமிழ்நாட்டில் உள்ள சென்னை-கன்னியாகுமரி தொழிற்துறை சாலைப் பகுதியில் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காகவும். தொழில்துறையை மேம்படுத்துவதற்காகவும், 484 மில்லியன் டாலர் கடனுக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன

## ➢ தமிழ்நாடு அரசு வேளாண்துறைக்காக தனியான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய உள்ளது

✓ தமிழ்நாடு அரசு, வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும், விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும், வேளாண்மைக்காக தனியான ஆண்டு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் என்று ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அறிவித்தார்.

## ➢ வருவாய், நிதி பற்றாக்குறை 2018-19ஆம் ஆண்டில் குறைவாகக் காட்டப்பட்டது: Revenue, fiscal deficits understated in 2018-19: சிஏஜி (CAG)

✓ 2018-19ஆம் ஆண்டில் ரூ.23,459.44 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை ரூ.3,757.23 கோடியாகவும், நிதி பற்றாக்குறை ரூ.1,300.49 கோடியாகவும் குறைத்துக் காட்டப்பட்டது. இதற்கு முதன்மையான காரணம் மூழ்கும் நிதி மற்றும் உத்தரவாத மீட்பு நிதி போன்ற பல்வேறு சேமிப்பு நிதிகள் ரூ.1,366 கோடி அளவுக்கு குறைவாக பரிமாற்றம் செய்யப்பட்டதே ஆகும் என்று மார்ச் 2019 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான மாநில நிதிகளுக்கான கணக்குகள் மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.2461.48 கோடி வட்டி வரவுகள் புத்தக அளவில் பரிமாற்றம் செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **மின்னகம் (Minnagam) – தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் – தனியான உதவி தொலைபேசி சேவையை தொடங்கி வைத்துள்ளது.**
  - ✓ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (Tangedco) நுகர்வோர் மின்சாரம் தொடர்பாக தங்களது பல்வேறு புகார்களைப் பதிவு செய்வதற்காக ‘மின்னகம்’ என்ற ஒரு புதிய சேவை அழைப்பு மையத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

APPOLO STUDY CENTRE

# மாநிலங்கள்

- **ஒரே நாடு, ஒரே குறைந்தபட்ச ஆதார விலை, ஒரே டிபிடி (One Nation, One MSP, One DBT)**
  - ✓ பஞ்சாப் மற்றும் ஹரியானா – ஒன்றிய அரசின் 'ஒரே நாடு, ஒரே குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஒரே டிபிடி' திட்டத்தின்கீழ், குறைந்தபட்ச ஆதார விலைக்கான நேரடி ரொக்கப் பரிமாற்றத்தை நடைமுறைப்படுத்திய கடைசி இரண்டு மாநிலங்களாக மாறியுள்ளன.

- **சீர்மிகு சமையலறை திட்டம் (Smart Kitchen Project)**
  - ✓ இந்தத் திட்டமானது, கேரள அரசால் நடத்தப்படும் ஒரு சிட் பண்ட் மற்றும் கடன் வழங்கும் நிறுவனமாகிய கேரளா மாநில நிதியியல் நிறுவனத்தால் (Kerala State Financial Enterprises) செயல்படுத்தப்படும்.
  - ✓ இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களையும் பரிந்துரைகளையும் வழங்குவதற்காக, செயலாளர் நிலையிலான ஒரு குழு அமைக்கப்படும் என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அறிவித்தார்.
  - ✓ இந்தத் திட்டத்தின்கீழ், வீட்டுக்குத் தேவையான கருவிகள் அல்லது உபகரணங்களை வாங்குவதற்காக கேரள மாநில நிதியியல் நிறுவனம் பெண்களுக்கு மென் கடன்களை வழங்கும்.

- **வேயான் (WEYAN) -100% தடுப்பூசி – நாட்டிலேயே முதல் கிராமம்**
  - ✓ ஜம்மு காஷ்மீரில் உள்ள வேயான் கிராமம் - கோவிட் 19க்கு எதிராக 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் 100 விழுக்காடு தடுப்பூசி செலுத்திய முதலாவது கிராமம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

- **புதிய தேசிய பூங்காக்கள் - அஸ்ஸாம்**
  - ✓ அஸ்ஸாமின் இரண்டு புதிய பூங்காக்கள் டிஹிங் பட்கை மற்றும் ரைமோனா ஆகும். அஸ்ஸாமில் ஏற்கனவே ஐந்து பூங்காக்கள் உள்ளன – கஜிரங்கா, மனஸ், திப்ரு-சாய்க்கோவா, நமேரி மற்றும் ராஜிவ் காந்தி ஓரங் தேசிய பூங்கா.
  - ✓ இவற்றில் கஜிரங்கா மற்றும் மனஸ் ஆகியவை யுனேஸ்கோ உலக புராதன சின்ன இடங்கள் ஆகும். அதே சமயம் கஜிரங்கா, மனஸ், நமேரி மற்றும் ஓரங் ஆகியவை புலிகள் காப்பகங்கள் ஆகும்.
  - ✓ இதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் (12) மற்றும் அந்தமான நிக்கோபார் தீவுகள் (9) தீவுகளுக்கு அடுத்தபடியாக, அதிக எண்ணிக்கையிலான தேசிய பூங்காக்களைக் கொண்ட மூன்றாவது பெரிய மாநிலமாக அஸ்ஸாம் விளங்கப் போகிறது.

- **கோவா – நாட்டிலேயே வெறிநாய்க்கடி நோய் இல்லாத முதலாவது மாநிலமாக கோவா ஆகியுள்ளது.**
  - ✓ கோவா முதலமைச்சர் பிரமோத் சாவந்த் அவர்களின் கூற்றுப் படி இந்த மாநிலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் எந்த ஒரு வெறிநாய்க்கடி நோயும் பதிவு செய்யப்படவில்லை.

# தேசிய செய்திகள்

➢ **ஆம்பிடேக் (AmbiTAG)**

- ✓ ஆம்பிடேக் என்பது குளிர் பதண சங்கிலி மேலாண்மைக்காக ஐஐடி, ரோபரால் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வெப்பநிலை தரவு லாக்கர் (temperature data logger) ஆகும்.
- ✓ ஒரு யுஎஸ்பி சாதனத்தைப் போன்றே வடிவமைக்கப்பட்ட இந்த ஆம்பிடேக், எந்த கால மண்டலத்திலும் அதனைச் சுற்றி 40 முதல் 80 டிகிரி சுற்றளவுக்குள் உள்ள வெப்பநிலைகளை 90 நாட்களுக்கு தொடர்ச்சியாக பதிவு செய்கிறது.

➢ **மாதிரி வாடகை சட்டம் (Model Tenancy Act)**

- ✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக் கூட்டம் - வாடகைக்குக் குடியிருப்பவர்கள் மற்றும் வீட்டு உரிமையாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக மாதிரி வாடகைச் சட்டத்தை அங்கீகரித்தது.

➢ **ஹா∴ப்கைன் பயோ∴பார்மா (Haffkine Biopharma)**

- ✓ மகாராஷ்டிராவைச் சேர்ந்த பொதுத் துறை நிறுவனமாகிய ஹா∴ப்கைன் பயோ∴பார்மா, பாரத் பயோடெக் லிட் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் அடிப்படையில் கோவேக்சின் தடுப்பூசியைத் தயாரிக்க உள்ளது.

➢ **நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG – 2030 Niti Aayog)**

- ✓ நிலையான வளர்ச்சி இலக்குகள் இந்தியா அட்டவணை முதன் முதலில் டிசம்பர் 2018ல் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ நாட்டின் நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஏற்படும் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு இது ஒரு முதன்மையான கருவியாக உருவெடுத்துள்ளது.
- ✓ இந்த அட்டவணையை ஐக்கிய நாடுகள் மற்றும் இந்தியா ஆகியவை ஒன்றிணைந்து கூட்டாக தயாரித்துள்ளன.
- ✓ உலகளாவிய குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை எட்டுவதற்கான நமது நாட்டின் பயணத்தில், தேசிய மற்றும் துணை தேசிய நிலைகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தை இது அளவிடுகிறது.
- ✓ **2018-19ஆம் ஆண்டில் இந்த அட்டவணையின் முதல் பதிப்பில் 13 குறிக்கோள்கள், 39 இலக்குகள், மற்றும் 62 குறிகாட்டிகள் இடம்பெற்றிருந்தன.**
- ✓ **2019-20ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்த அட்டவணையின் இரண்டாவது பதிப்பில் 17 குறிக்கோள்கள், 54 இலக்குகள் மற்றும் 100 குறிகாட்டிகள் இடம்பெற்றிருந்தன.**
- ✓ **மூன்றாவது பதிப்பில் 17 குறிக்கோள்கள், 70 இலக்குகள், மற்றும் 115 குறிகாட்டிகள் இடம் பெற்றுள்ளன.**
- ✓ 2015ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளும் 2030க்குள் நிறைவேற்றுவதற்காக 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் கூடுதலான 169 இலக்குகளை ஏற்றுக் கொண்டன.

➢ **தேசிய நீதித்துறை கட்டமைப்புக் கழகம் (National Judicial Infrastructure Corporation)**

- ✓ இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகிய என்.வி. ரமணா - இந்தியா முழுவதும் நவீன மற்றும் சுய சார்பு நீதித்துறை கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக, தேசிய நீதித்துறை கட்டமைப்பு கழகத்தை ஏற்படுத்தும் ஒரு இலட்சிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

- ✓ இந்த தேசிய நீதித்துறை கட்டமைப்புக் கழகத்தை, எதிர்காலத்தில் இந்திய தலைமை நீதிபதியாக வாய்ப்புள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட, உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியைத் தலைவராகக் கொண்ட குழு நிர்வகிக்கும் என்று திட்டமிட்டார்.
- ✓ இந்த தேசிய நீதித் துறை கட்டமைப்புக் கழக மேலாண்மைக் கழகத்தில் ஒன்றிய-மாநில அரசுகளின் நிதிச் செயலாளர்களும் மற்றும் நீண்ட பதவிக் காலத்தைக் கொண்ட உயர்நிதிமன்ற தலைமை நீதிபதிகளும் உறுப்பினர்களாக இருப்பர்.

## ➢ எத்தனால் - கலந்த பெட்ரோல்

- ✓ இந்தியா – பெட்ரோலுடன் 20 விழுக்காடு எத்தனால் கலப்பதற்கான தன்னுடைய இலக்கு ஆண்டை 2030லிருந்து ஐந்து ஆண்டு முன்னேறி 2025க்கு மாற்றியுள்ளது.
- ✓ உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி, 'எத்தனால் கலப்பு சாலை வரைபடம் 2020-25' என்ற அறிக்கையை வெளியிட்ட பின்பு ஜுன் 5ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி இதை அறிவித்தார்.

## ➢ ஆயுஷ் மருத்துவ களஞ்சிய (Ayush Clinical Case Repository) போர்ட்டல்

- ✓ கிரென் ரிஜிஜு - சமீபத்தில் மெய்நிகராக நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஆயுஷ் மருத்துவ களஞ்சிய போர்ட்டலையும், ஆயுஷ் சஞ்சீவனி கைப்பேசி செயலியின் மூன்றாவது பதிப்பையும் வெளியிட்டார்.
- ✓ ஆயுஷ் மருத்துவ களஞ்சிய போர்ட்டல் (https://accr.ayush.gov.in/), ஆயுஷ் மருத்துவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஒரு ஆதார மேடையாக சேவை செய்யும்.

## ➢ SEHAT

- ✓ பாதுகாப்புத் துறை அமைச்சர், ராஜ்நாத் சிங் - சமீபத்தில் மின் சுகாதார உதவி சேவைகள் மற்றும் தொலை ஆலோசனை (Services e-Health Assistance & Tele-consultation) ஓபிடி போர்ட்டலை தொடங்கி வைத்தார்.

## ➢ சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க்

- ✓ ஐடிபிஐ வங்கியில் உள்ள அரசின் பங்குகளை விற்பனை செய்வதற்கு ஒன்றிய அமைச்சரவை சமீபத்தில் அனுமதியளித்தது.
- ✓ ஐடிபிஐ வங்கியில் வைத்துள்ள தன்னுடைய பங்குகளை அரசு நடப்பு நிதியாண்டிற்குள் விற்பனை செய்து முடித்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ மாநில அரசு நடத்தும் ஒரு டஜன் கடன் வழங்கும் வங்கிகளில், பேங்க் ஆப் மகாராஷ்டிரா, பஞ்சாப் மற்றும் சிந்த் பேங்க், யூகோ பேங்க், பேங்க் ஆப் இந்தியா, ஐஓபி மற்றும் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா ஆகிய வங்கிகளிலிருந்து மூலோபாய முதலீடுகளைத் திரும்பப் பெறுவதற்கு நித்தி ஆயோக் அமைப்பு (**NITI Aayog**) இலக்கு வைத்துள்ளது.
- ✓ நடப்பு சந்தை விலையின் அடிப்படையில், இரண்டு வங்கிகளின் ஒட்டு மொத்த மதிப்பு ரூ.44,000 கோடி எனவும், ஐஓபி யின் சந்தை முதலீடு சுமார் ரூ.31,641 கோடி எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## ➢ நானோ யூரியா (Nano Urea)

- ✓ இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிட் (Indian Farmers Fertiliser Cooperative Limited -IFFCO) – நைட்ரஜன் உரம் அடிப்படையிலான நானோ யூரியாவை ஜுன் 2021ல் சந்தையில் தொடங்கி வைக்கும்.

- **பிரதமர் நரேந்திர மோடி – பிரதமர் கரீப் கல்யாண் அன்ன யோஜனா (Pradhan Mantri Garib Kalyan Anna Yojana) திட்டத்தை இந்த 2021ஆம் ஆண்டு தீபாவளி வரை நீட்டிப்பதாக அறிவித்துள்ளார்.**
  - ✓ இந்த நீட்டிப்பு காரணமாக ஒவ்வொரு பயனாளிக்கும் ஒவ்வொரு மாதமும் 5 கிலோ இலவச உணவு தானியம் கிடைக்கும். இதன்மூலம் சுமார் 80 கோடி ஏழைகளுக்கு நிவாரணம் கிடைக்கும்.
  - ✓ இது தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மிக அதிக மானிய விலையிலான 5 கிலோ உணவுதானியத்துடன் கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

- **உயர் நீதிமன்றம் மற்றும் விசாரணை நிதிமன்றங்களின் விசாரணையை நேரலையில் ஒளிபரப்புதல்**
  - ✓ ஒன்றிய அரசு - அனைத்து உயர் நிதி மன்றங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றங்களில் நடைபெறும் விசாரணையை நேரலையில் ஒளிபரப்புவதற்காக, உச்ச நிதிமன்றத்தின் மின்-குழு தயாரித்த வரைவு விதிகளை வெளியிட்டது.
  - ✓ சமீபத்தில், இந்திய உச்ச நிதிமன்றத் தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை நேரலையாக ஒளிபரப்புவது பற்றி தான் தீவிரமாக யோசித்து வருவதாகத் தெரிவித்தார்.
  - ✓ ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திலிருந்தும் 10 நிமிட இடைவெளியில் நடவடிக்கைகளை நேரலையில் ஒளிபரப்புவதற்கான விரிவான வழிமுறைகளை இந்த மின்-குழு வரையறுத்துள்ளது.
  - ✓ விரும்பத் தகாத நிகழ்வுகள் பொதுமக்களை நேரடியாகச் சென்றடைவதைத் தடுத்து அதைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்காகவே இந்த கால இடைவெளி வழங்கப்பட்டுள்ளது.

- **நிஜத்தை நோக்கி இன்னும் ஒரு படி முன்னே**
  - ✓ நீதியரசர் டிஒய் சந்திரசூட் தலைமையிலான உச்ச நீதிமன்ற மின்-குழு, அனைத்து உயர்நீதி மன்றங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றங்களின் அனைத்து நடவடிக்கைகளையும் நேரலையில் காட்டுவதற்கான வரைவு விதிகளை வகுத்துள்ளது.
  - ✓ ஒன்றிய அரசு தற்போது பங்குதாரர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து அவர்களின் கருத்துக்களை கேட்டுள்ளது.
  - ✓ நீதிமன்றத்தைத் தவிர வேறு எவரும் நீதிமன்ற நடவடிக்கைகளை நேரலையாக ஒளிபரப்பவோ, அதைப் பதிவு செய்யவோ இயலாது.
  - ✓ விதியை மீறுபவர்கள் நீதிமன்ற அவமதிப்பு விதியின்கீழ் தண்டனைக்கு உள்ளாவார்கள், அத்துடன் காப்பி ரைட் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
  - ✓ திருமணம் குறித்த விஷயங்கள், போஸ்கோ சட்டங்கள் உள்ளிட்ட பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகள், போன்றவை நேரலையில் ஒளிபரப்பப்பட மாட்டாது.
  - ✓ உயர்நீதி மன்றங்களின் தலைமை நீதிபதிகள், எந்த ஒரு வழக்கையும் நேரலையாக ஒளிபரப்புவதற்கு அனுமதிக்கவோ அல்லது அனுமதி மறுக்கவோ செய்யலாம்.

- **யுவா (YUVA) – பிரதமரின் திட்டம்**
  - ✓ கல்வி அமைச்சகம் - சமீபத்தில் 'யுவா - இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக பிரதமரின் திட்டம்'ஐ தொடங்கி வைத்தது.

- ✓ யுவா (YUVA) என்பது "Young, Upcoming and Versatile Authors" (இளம், வளர்ந்து வரும் மற்றும் பல்துறை எழுத்தாளர்கள்' என்பதைக் குறிக்கும்.
- ✓ இந்தத் திட்டமானது ஒன்றிய கல்வி அமைச்சகத்தின்கீழ், 'இந்திய தேசிய புத்தக அறக்கட்டளை" (National Book Trust of India) என்ற அமைப்பால் செயல்படுத்தப்படுகிறது.
- ✓ யுவா திட்டத்தின்கீழ், மொத்தம் 75 ஆசிரியர்கள் அகில இந்திய போட்டியால் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்களில் வெற்றியாளர்கள் ஆகஸ்ட் 15, 2021 அன்று அறிவிக்கப்படுவார்கள்.
- ✓ பதிப்பிக்கப்பட்ட புத்தகங்கள் ஜனவரி 2022 அன்று தேசிய இளைஞர் தினத்தன்று வெளியிடப்படும்.

### ➢ உயர்கல்வி தொடர்பான அகில இந்திய சர்வே – அறிக்கை

- ✓ இந்தியா – உயர் கல்வியில் ஒட்டு மொத்தமான சேர்க்கை வீதமாக 27.1 விழுக்காட்டைக் கொண்டுள்ளது. பெண்களின் ஒட்டு மொத்த சேர்க்கை வீதம் 27.3 விழுக்காடு ஆகவும், ஆண்களின் ஒட்டு மொத்த சேர்க்கை வீதம் 26.9 விழுக்காடு ஆகவும் உள்ளது.
- ✓ 2019-20ஆம் ஆண்டுக்கான உயர்கல்வி தொடர்பான அகில இந்திய சர்வே (All-India Survey on Higher Education - AISHE) ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்டது.

### ➢ 44- ஜிஎஸ்டி கவுன்சில்

- ✓ நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் - ஜூன் மாதத்தில் காணொலி காட்சி வாயிலாக நடத்தப்பட்ட ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார்.

### ➢ FAME II திட்டம்

- ✓ அரசு – ஜூன் மாதத்தில் பல்வேறு சலுகைகளை அறிவித்ததன்மூலம் விரைவான தத்தெடுப்பு, உற்பத்தி (கலப்பினம்) மற்றும் மின்சார வாகனங்கள் 2 (Faster Adoption and Manufacturing of (Hybrid) and Electric Vehicles II -FAME II) திட்டத்தை மறுசீரமைப்பு செய்துள்ளது.
- ✓ புதிய திருத்தங்களின்படி, மின்சார இருசக்கர வாகனங்களின்மீதான ஊக்கத் தொகை ஒரு கிலோ வாட்டிற்கு ரூ.10,000 முதல் ரூ.15,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### ➢ 3டி வைரல் எதிர்ப்பு முகக் கவசம்

- ✓ புனேவைச் சேர்ந்த திங்கர் டெக்னாலஜீஸ் இந்தியா பிரைவேட் லிட் என்ற தொடக்கநிலை நிறுவனம் ஒரு சிறப்பு வகையான விலை குறைந்த முப்பரிமாணத்தில் அச்சடிக்கப்பட்ட வைரல் எதிர்ப்பு முகக் கவசத்தை உருவாக்கியுள்ளது.

### ➢ 'ஆபரேஷன் ஒலிவியா'

- ✓ இந்திய கடலோர காவல் படை – ஒடிசா மாநிலத்தில் அழிவின் விளிம்பில் உள்ள ஆலிவ் ரிட்லீ ஆமைகளைக் காப்பாற்றுவதற்காக 'ஆபரேஷன் ஒலிவியா' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது.
- ✓ ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஆலிவ் ரிட்லீ ஆமைகளின் அடைகாக்கும் பருவங்களில் அவற்றின் இனத்தைப் பாதுகாப்பதற்காக, ஆபரேஷன் ஒலிவியா தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- ✓ 1980களின் தொடக்கத்தில் தொடங்கி வைக்கப்பட்ட இந்த ஆபரேஷன் ஒலிவியா திட்டமானது, இந்த ஒலிவியா ஆமைகள் தங்களின் இனப்பெருக்கத்திற்காகவும், அடைகாப்பதற்காகவும் ஒன்றுகூடும் அவற்றின் முதன்மை வாழ்விடமாகிய ஒடிசா கடற்கரையில் இருந்து தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியத்தின் (International Union for Conservation of Nature) கூற்றுப்படி, ஆலிவ் ரிட்லீ இனமானது 'பாதிக்கப்படக்கூடியது' என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## ➢ ஜீவன் வாயு (JivanVayu)

- ✓ ரோபார் இந்திய தொழில்நுட்பக் கழகம் - 'ஜீவன் வாயு' என்ற ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளது. இதை தொடர் நேர்மறை காற்றுப் பாதை அழுத்த (Continuous positive airway pressure) கருவிக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.
- ✓ 'ஜீவன் வாயு' ஒரு நிமிடத்திற்கு 20 முதல் 60 லிட்டர் என்ற அளவில் அதிக ஓட்ட ஆக்சிஜனை வழங்கும். அதே சமயம் 20 செமீ $H_2O$ என்ற நேர்மறை அழுத்தத்தைத் தொடர்ந்து பராமரிக்கும்.

## ➢ ஆழ் கடல் இயக்கம் (Deep Ocean Mission)

- ✓ பிரதமர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் - சமீபத்தில் 'ஆழ் கடல் இயக்கம்' திட்டத்திற்கு அனுமதியை வழங்கியது.
- ✓ இந்த இயக்கத்தை புவி அறிவியல் அமைச்சகம் முன்மொழிந்தது.
- ✓ இது வளத்தை நாடி ஆழ்கடலை ஆய்வு செய்ய முனைகிறது. அத்துடன் கடல் வளங்களை நீடித்து பயன்படுத்துவதற்காக ஆழ்கடல் தொழில்நுட்பத்தை உருவாக்கவும் முனைகிறது.
- ✓ இந்த இயக்கமானது பல்வேறு கட்டங்களாக செயல்படுத்தப்படும்.
- ✓ ஐக்கிய நாடுகள் அமைப்பு 2021-2030 பத்தாண்டை 'நீடித்த வளர்ச்சிக்கான பெருங்கடல் அறிவியல் பத்தாண்டு' என்று அறிவித்துள்ளது.
- ✓ பிப்ரவரி 2019ல் வெளியிடப்பட்ட இந்திய அரசின் '2030க்கான புதிய இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை' வளர்ச்சிக்கான பத்து முக்கிய பரிமாணங்களில் ஒன்றாக 'நீலப் பொருளாதாரத்தை' முன்னிலைப்படுத்தியுள்ளது.

## ➢ UNECOSOC – இந்தியா

- ✓ இந்தியா – சமீபத்தில் ஐக்கிய நாடுகள், பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலுக்கு (United Nations, Economic and Social Council - ECOSOC) – ஆசியா பசிபிக் நாடுகள் பிரிவின்கீழ் 2022-24ஆம் ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## ➢ NISHTHA

- ✓ எக்லாவிய மாதிரி உறைவிடப் பள்ளிகளுக்கான (Eklavya Model Residential Schools) 'NISHTHA திறன் வளர்ப்புத் திட்டம்'.
- ✓ இது 2019-20ஆம் ஆண்டில் சமக்கிர சிக்ஷா (Samagra Shiksha) திட்டத்தின்கீழ் ஒரு தேசிய இயக்கமாக பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையினால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ✓ இந்த முனைப்பானது தொடக்க நிலையில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பள்ளி முதல்வர்களின் திறன்களை மேம்படுத்துவதையும். அதன்மூலமாக பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ✓ என்சிஇஆர்டி-யின் இந்த முன்னோடித் திட்டத்திற்கான பயிற்சி நிஷ்த்தா போர்ட்டலில் ஆன்லைனில் நடத்தப்பட்டது.

**➢ உலக முதலீட்டு அந்நிய நேரடி முதலீட்டு வரத்து அறிக்கை 2021**

- ✓ இந்தியா – 2020ஆம் ஆண்டில் 64 பில்லியன் டாலர்களைப் பெற்றதைத் தொடர்ந்து, அந்நிய நேரடி முதலீட்டு வரத்தைப் பெறும் ஐந்தாவது பெரிய நாடாக விளங்குகிறது.
- ✓ இந்த அறிக்கையின்படி, நமது நாட்டிற்கான அந்நிய நேரடி முதலீட்டு வரத்து 2019ஆம் ஆண்டில் 51 பில்லியன் டாலரில் இருந்தது, 2020ஆம் ஆண்டில் 64 பில்லியன் டாலராக 27 விழுக்காடு அதிகரித்துள்ளது.

**➢ திவ்யக்தா கேல் கேந்திராக்கள் (Divyagta khel Kendras)**

- ✓ ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் தாவர் சந்த் கெலாட் - நாடு முழுவதும் ஐந்து 'திவ்யக்தா கேல் கேந்திராக்கள்' அமைக்கப்படும் என்று அறிவித்தார்.
- ✓ உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த மையங்கள் விளையாட்டுகளில் மாற்றுத் திறனாளி நபர்களுக்கு ஆதரவளித்து, பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் அவர்கள் சிறப்பாக செயல்பட ஆதரவளிக்கும்.

**➢ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் - மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம்**

- ✓ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் - மத்திய கிழங்கு பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் - மரவள்ளிக் கிழங்கு அல்லது மரவள்ளியை பயோ எத்தனால் உற்பத்திக்கான ஒரு மூலப்பொருள் ஆதாரம் என்று கண்டுபிடித்துள்ளது.
- ✓ இந்தக் கண்டுபிடிப்பு 2025ஆம் ஆண்டு வாக்கில், எத்தனால் கலப்பு பெட்ரோலை உற்பத்தி செய்ய முனையும் அரசின் இலட்சிய திட்டத்திற்குத் தேவையான, பயோ எத்தனாலை உற்பத்தி செய்வதற்கு நமது நாட்டிற்கு உதவியாக இருக்கும்.

**➢ முதலாவது மரபணு மாற்றம் செய்யப்பட்ட இரப்பர் தாவரம்**

- ✓ உலகின் முதலாவது மரபணு மாற்றம் செய்யப்பட்ட இரப்பர் தாவரம் -அஸ்ஸாமில் உள்ள இரப்பர் வாரிய ஆராய்ச்சிப் பண்ணையில் ஜுன் மாதத்தில் நடப்பட்டது.
- ✓ இந்தத் தாவரத்தை கேரளாவின் கோட்டயத்தில் புதுப்பள்ளியில் அமைந்துள்ள இந்திய இரப்பர் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- ✓ இந்த புதிய தாவரம் அஸ்ஸாமில் உள்ள இரப்பர் வாரியத்தின் கௌஹாத்தி சாருடரி ஆராய்ச்சிப் பண்ணையில் நடப்பட்டுள்ளது.
- ✓ இந்தப் புதிய பயிர் இரப்பரின் முதிர்வு காலத்தைக் குறைத்து, மிக விரைவிலேயே விளைச்சலைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ மரபணு மாற்றம் செய்யப்பட்ட இந்த இரப்பர் தாவரம், வடகிழக்கு மண்டலத்திற்காகவே உருவாக்கப்பட்ட, இந்த வகையில் முதலாவதான தாவரம் ஆகும்.

**➢ திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்** - மூன்று வகையான வென்டிலேட்டர்களையும், ஒரு ஆக்சிஜன் செறிவூட்டியையும் உருவாக்கியுள்ளது.

- ✓ இந்த 3 வென்டிலேட்டர்களுக்கும் பிராணா, வாயு (**VaU**) மற்றும் ஸ்வஸ்தா என்று பெயரிடப்பட்டுள்ளன. அதே சமயம் ஆக்சிஜன் செறிவூட்டிக்கு ஷ்வாஸ் (**Shwaas**) என்று பெயரிடப்பட்டுள்ளது.

- ✓ பிராணா என்பது அம்பு பையை (Ambu bag) தானாகச் சுருங்கச் செய்வதன் மூலமாக, நோயாளிக்கு சுவாசக் காற்றை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றத் தீர்ப்புகள்

- **சென்னை உயர் நீதிமன்றம்** - தமிழ்நாட்டின் வளமான கோவில் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாநில மற்றும் ஒன்றிய அரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

- **உச்ச நீதி மன்றம் ஜூன் மாதத்தில்** - மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்பது புதிய மாவட்டங்களின் உள்ளாட்சி அமைப்புகளுக்கு செப்டம்பர் 15க்குள் உள்ளாட்சித் தேர்தலை நடத்துமாறு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.
  - ✓ ஏற்கனவே இருந்த நான்கு மாவட்டங்களைப் பிரித்து உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்கள் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகும்.

- **ஒரே நாடு ஒரே ரேஷன்**
  - ✓ உச்ச நீதிமன்றம் - 'ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை' திட்டத்தை ஜூலை மாதத்திற்குள் செயல்படுத்துமாறு மாநிலங்களையும் யூனியன் பிரதேசங்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.
  - ✓ அஷோக் பூஷன் மற்றும் எம் ஆர் ஷா ஆகியோரைக் கொண்ட அமர்வு, ஆகஸ்ட் 21, 2018ல் தான் வழங்கிய ஆணையின்படி, அமைப்புசாரா தொழிலாளர்களைப் பதிவு செய்வதில் 'மன்னிக்க முடியாத காலதாமதம்' ஏற்படுத்தியதாக ஒன்றிய அரசை விமர்சித்து ஆணைகளை வழங்கியது.
  - ✓ இந்த 'ஒரு நாடு ஒரே ரேஷன் அட்டை' திட்டமானது இடம் பெயரும் தொழிலாளர்கள் தங்கள் குடும்ப அட்டைகள் பதிவு செய்யப்பட்ட மாநிலங்கள் அல்லாது இதர மாநிலங்களிலும் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் ரேஷன் பொருட்களைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கிறது.

# சர்வதேச செய்திகள்

- **இந்தியாவுக்கான அமெரிக்க தடுப்பூசிகள் பற்றி பேசுவதற்காக கமலா ஹாரிஸ் பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்**
  - ✓ வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், வாஷிங்டன் டிசி-யில் உள்ள பைடன் நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பிலுள்ள அலுவலர்களைச் சந்தித்து கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தன்னுடைய உலகளாவிய தடுப்பூசி பங்கீட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக கோவிட்-19 தடுப்பூசியை இந்தியாவிற்கு வழங்குவதாக அமெரிக்கா அறிவித்தது.

- **8வது உலகளாவிய நைட்ரஜன் மாநாட்டை ஜெர்மனி நடத்துகிறது**
  - ✓ 8வது சர்வதேச நைட்ரஜன் முனைப்பு மாநாடு (INI2020) ஜெர்மனியில் உள்ள பெர்லினில் நடைபெற்றது.

- **இஸ்ரேலின் புதிய பிரதமர்**
  - ✓ **ந.ஃப்டாலி பென்னெட்** மிகக் குறுகிய வித்தியாசத்தில், அதாவது 59 தேவைக்கு 60 பெற்று, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து இஸ்ரேலின் புதிய பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டார். இவரது வெற்றியானது, நாட்டில் மிக நீண்ட காலம் பதவியில் இருந்த முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவின் 12 ஆண்டு கால அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவியது.

- **உலக அமைதி அட்டவணையின் 15வது பதிப்பு**
  - ✓ பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான சிட்னி நிறுவனம் உலக அமைதி அட்டவணையின் 15வது பதிப்பை அறிவித்துள்ளது. இந்த உலகப் பொருளாதார அட்டவணையே உலக அமைதியை அளவிடுவதற்கான உலகின் முன்னணி அளவுகோல் ஆகும்.

- **உலகன் மூன்றாவது மிகப்பெரிய வைரம் போட்ஸ்வானாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது**
  - ✓ உலகின் மூன்றாவது மிகப்பெரிய வைரம் தென் ஆப்பிரிக்காவில் உள்ள போட்ஸ்வானாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த போட்ஸ்வானா நகரம், ஆப்பிரிக்காவில் அதிக அளவில் வைரம் உற்பத்தி செய்யும் இடமும் ஆகும்.
  - ✓ புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரமானது இரண்டாவது மிகப்பெரிய லெசெடி லா ரோனா வைரத்தின் எடையாகிய 1109 கேரட்டுகளை விட மிகவும் சிறிதளவே குறைவு ஆகும். மிகப்பெரிய வைரமாகிய 3106 கேரட் குல்லினான் வைரம்கூட தென் ஆப்பிரிக்காவிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- **சீனா - இரண்டு குழந்தைகள் கொள்கைக்கு முடிவு கட்டியது**
  - ✓ இரண்டு குழந்தைகள் கொள்கையானது, குறைந்து வரும் பிறப்பு விகிதத்தை அதிகரிக்கத் தவறியதால், சீனா இந்தக் கொள்கைக்கு முடிவு கட்டியது.
  - ✓ சீனா தொழிலாளர்கள் பற்றாக் குறையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது, இதனால் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

- **சர்வதேச சூரியக் கூட்டணி**
  - ✓ பிரான்ஸ் - சர்வதேச சூரிய கூட்டணிக்கு நேரடியாக 1 மில்லியன் யூரோவை வழங்குவதாக அறிவித்தது.

- **அமெரிக்க அரசியல்வாதிகள்** - 'பச்சை அட்டை வைத்திருப்பவர்களுக்கு சமமான அணுகல் அனுமதியை வழங்கும்' இரு கட்சி மசோதாவைக் கொண்டு வந்தனர். இது 'கழுகு சட்டம்' (Eagle Act) என்றும் அழைக்கப்படுகிறது.
- **பிட் காயின் சட்டபூர்வ நாணயம் (Bit Coin Legal Tender)**
  - ✓ எல் சால்வடார் (El Salvador) – பிட் காயினை சட்டபூர்வ நாணயமாக ஏற்றுக் கொண்ட உலகின் முதலாவது நாடாக ஆகியுள்ளது.

- **'சிவப்பு சுற்றுலா (Red Tourism)**
  - ✓ சீனா – கம்யூனிஸ்ட் கட்சியின் 100வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் 'சிவப்பு சுற்றுலாவை' 2021ஆம் ஆண்டில் ஊக்குவிக்க உள்ளது.

- **உலகின் நன்மைக்காக மீண்டும் கட்டமைப்போம் (Build Back Better for World)**
  - ✓ அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் ஜி7 நாடுகளின் தலைவர்கள் – 'உலகின் நன்மைக்காக மீண்டும் கட்டமைப்போம்' என்ற ஒரு புதிய திட்டத்தை, இங்கிலாந்தின் தலைமையில் ஜுன் 12 அன்று நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் அறிவித்தனர்.

- **ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (The United Nations Educational, Scientific and Cultural Organisation - UNESCO) குழு – காலநிலை மாற்றம் காரணமாக பெரிய தடுப்புப் பாறையை 'அபாயகரமானது' பட்டியல் பிரிவில் சேர்க்கத் திட்டமிட்டுள்ளது.**

- **ஐநா வர்த்தகம் மற்றும் வளர்ச்சி தொடர்பான உச்சி மாநாடு (UN Conference on Trade and Development)**
  - ✓ ஜுன் 21 அன்று வெளியிடப்பட்ட ஐநா வர்த்தகம் மற்றும் வளர்ச்சி தொடர்பான உச்சி மாநாட்டு அறிக்கையில், இந்த கொரோனா பெருந்தொற்று காரணமாக உலகளாவிய அன்னிய நேரடி முதலீடு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது 2020ஆம் ஆண்டு 35 விழுக்காடு குறைந்து 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. இது முந்தைய ஆண்டில் 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

- **இந்தியாவில் அன்னிய நேரடி முதலீடு 2020ஆம் ஆண்டில் 27 விழுக்காடு உயர்ந்து 64 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.** முந்தைய ஆண்டாகிய 2019ல் இது 51 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. இந்த உயர்வுக்குக் காரணம் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் கூடுதல் சேர்க்கையே என்றும், இதன் காரணமாக நமது நாடு உலக அளவில் ஐந்தாவது மிகப்பெரிய அன்னிய நேரடி முதலீட்டை ஈர்த்த நாடு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  **முதல் 3 இடத்தைப் பிடித்த நாடுகள்**
  - ✓ **அமெரிக்கா – 156 பில்லியன் அமெரிக்க டாலர்**
  - ✓ **சீனா – 149 பில்லியன் அமெரிக்க டாலர்**
  - ✓ **ஹாங்காங் - 119 பில்லியன் அமெரிக்க டாலர்**

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **ஜல்கான் வாழைப்பழம்**
  - ✓ இந்தியா – புவிசார் குறியீடு பெறப்பட்ட ஜர்தாலு மாம்பழம் மற்றும் ஜல்கான் வாழைப் பழங்களை துபாய்க்கு அனுப்புவதற்காக முதல் சரக்கை ஏற்றுமதி செய்துள்ளது.

- **சூரிய சக்தி**
  - ✓ இந்தியா - இலங்கைத் தீவில் சூரிய சக்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக 100 மில்லியன் டாலர் கடன் தொகையை வழங்கியுள்ளது.

- **டென்மார்க் - சர்வதேச சூரிய கூட்டமைப்பு கட்டமைப்பு ஒப்பந்தம் (International Solar Alliance Framework Agreement) மற்றும் ஒப்புதல் அளிக்கும் கருவி ஒப்பந்தத்தில் ஜூன் மாதம் இந்தியாவுடன் கையெழுத்திட்டுள்ளது.**
  - ✓ சர்வதேச சூரிய கூட்டணி என்பது 121 நாடுகளின் கூட்டமைப்பாகும். இவற்றில் பெரும்பாலானவை கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அமைந்துள்ள சூரிய ஒளி பெறும் நாடுகள் ஆகும்.

- **ஜி20 நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களின் கூட்டம் இத்தாலியின் மட்டீரியாவில் நடைபெற்றது**
  - ✓ ஜி20 வெளியுறவுத் துறை அமைச்சர்களின் மாநாடு இத்தாலியில் நடைபெறும் பின்னணியில், ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொள்வதற்காக, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்பிரதியாகிய ஜோசப் போரெல்.ஃபோன்டெல்லஸ் உடன் கோவிஷீல்டு அங்கீகாரத்தை எடுத்துக் கொண்டார்.

- **2022ஆம் ஆண்டில், 9வது ஆசிய அமைச்சர்கள் நிலையிலான ஆற்றல் வட்ட மேசை மாநாட்டை இந்தியா நடத்த உள்ளது**
  - ✓ இந்தியா, 2022ஆம் ஆண்டில், 9வது ஆசிய அமைச்சர்கள் நிலையிலான ஆற்றல் வட்ட மேசை மாநாட்டை நடத்த உள்ளது.
  - ✓ சர்வதேச ஆற்றல் மன்ற தலைமைச் செயலாளர் ஜோசப் மெக் மோனிகிள் மற்றும் ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆகியோருக்கு இடையே சமீபத்தில் நடைபெற்ற மெய் நிகர் கூட்டத்தின்படி, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

- **பிரிக்ஸ் - கூட்டங்கள்**
  - ✓ 5 நாடுகள் கூட்டமைப்பான, பிரிக்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் நிலையிலான மெய்நிகர் கூட்டம் ஜூன் 1 அன்று நடைபெற்றது. இதில் வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய் சங்கர் கலந்து கொண்டார்.
  - ✓ பிரிக்ஸ் நாடுகளின் தலைவர் என்ற முறையில் இந்தியா இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது – பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகியவை பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் ஆகும்.

- **நேட்டோ – 31வது கூட்டம் புருசெல்சில் நடைபெற்றது**
  - ✓ நேட்டோவின் 30 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் - நேட்டோ அரசுத் தலைவர்களின் 31வது முறைப்படியான கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, ஜூன் 14 அன்று, நேட்டோவின் தலைமையிடமான பெல்ஜியத்தில் உள்ள புருசெல்சுக்கு வருகை புரிந்தனர். (NATO - North Atlantic Treaty Organisation)

- **இந்தியா – பிரிக்ஸ் நாடுகளை உள்ளடக்கிய, பசுமை ஹைட்ரஜன் முனைப்புகள் தொடர்பான இரண்டு நாள் உச்சி மாநாட்டை ஜூன் 22 அன்று காணொலி காட்சி வாயிலாக நடத்த உள்ளது.**
  - ✓ இந்தியாவின் அரசுத் துறை நிறுவனமாகிய தேசிய அனல் மின்நிலைய கழகம் (National Thermal Power Corporation Limited) இந்த நிகழ்ச்சியை ஏற்று நடத்த உள்ளது.
  - ✓ இந்த உச்சி மாநாடு உறுப்பு நாடுகளுக்கு ஹைட்ரஜனைப் பயன்படுத்துவதற்கான முன்முயற்சிகளை அவர்களின் எதிர்காலத் திட்டங்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவும், ஊக்குவிப்பதற்காகவும் ஒரு மன்றத்தை வழங்கும்.
  - ✓ புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்தி மின்னாற்பகுப்பு முறையில் ஹைட்ரஜனை உற்பத்தி செய்தால், அது 'பசுமை ஹைட்ரஜன்' என்று அழைக்கப்படுகிறது. இதில் கார்பனின் அடையாளங்கள் ஏதும் இருக்காது, அதனால் உமிழ்வுகளும் இருக்காது.

# பாதுகாப்பு

- ஃப்ளீட் விருதுகள் 2021இல் ஐஎன்எஸ் சஹ்யாத்ரிக்கு ‘சிறந்த கப்பல்’ பட்டம் வழங்கப்பட்டது.
- இந்திய கடலோர காவல் படை, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3 மேம்பட்ட எடை குறைந்த ஹெலிகாப்டர்களாகிய ALH MK III ஐ படைப்பிரிவில் சேர்த்துக் கொண்டது.
- பிரதமர் நரேந்திர மோடியின் ஆத்மநிர்பார் பாரத் விஷனின் ஒரு பகுதியாக, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3 மேம்பட்ட எடை குறைந்த ஹெலிகாப்டர்கள் ALH MK III இந்திய கடலோர காவல் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்று பாதுகாப்புத் துறை செயலாளர் டாக்டர். அஜய் குமார் தெரிவித்தார்.

- **ஐரோப்பிய யூனியன் கடற்படை (EUNAVFOR)**
  - ✓ முதல் முறையாக, ஐரோப்பிய யூனியன் கடற்படையுடன் இணைந்து இந்திய கடற்படை கூட்டுப் பயிற்சியில் கலந்து கொண்டுள்ளது. கொள்ளை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்கனவே ஈடுபடுத்தப்பட்டு வளைகுடா பிராந்தியத்தில் உள்ள மறைந்திருந்து தாக்கும் எதிர்ப்புக் கப்பலாகிய ஐஎன்எஸ் திரிகாந்த் ஏடன் வளைகுடா பகுதியில் இரண்டு நாள் பயிற்சியில் கலந்து கொள்ள உள்ளது.

- **சாகர் புர்வி (Sagar Purvi)**
  - ✓ சென்னையைச் சேர்ந்த தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்குச் (National Institute of Ocean Technology) சொந்தமான சாகர் புர்வி என்ற மிகவும் பழமையான கடலோர ஆராய்ச்சிக் கப்பல் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்டது.
  - ✓ தற்போது, புவி அறிவியல் அமைச்சகத்திடம் ஆறு கப்பல்கள் உள்ளன. அவை சாகர் கன்யா. சாகர் சம்படா, சாகர் நிதி, சாகர் மஞ்சுஷா மற்றும் சமீபத்தில் வாங்கப்பட்ட கப்பல்களான சாகர் தாரா மற்றும் சாகர் அன்வேஷிகா.

- **திட்டம்-85 இந்தியா (Project-75 India) – அந்நிய ஒத்துழைப்புடன் ஆறு புதிய தலைமுறை மறைந்திருந்து தாக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்ட உள்ளது.**
  - ✓ பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான இந்தியாவின் உயரிய கொள்முதல் அமைப்பாகிய, பாதுகாப்பு கொள்முதல் குழு, இந்தக் கொள்முதலை அங்கீகரித்தது. இந்திய கடற்படையானது பி-75 இந்தியா என்ற திட்டத்திற்காக கோரிக்கைகளுக்கான வேண்டுகோள்களை விரைவில் வெளியிட உள்ளது.

- **சஜாக் (Sajag)**
  - ✓ தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (National Security Advisor) - இந்திய கடலோர காவல்படை ரோந்துக் கப்பலாகிய ‘சஜாக்’ஐ நாட்டின் கடல் எல்லையைப் பாதுகாக்கும் பொருட்டு சமீபத்தில் நாட்டிற்கு அர்ப்பணித்தார்.

- **இரண்டாவது ரஃபேல் படை**
  - ✓ இந்திய விமானப் படை - இரண்டாவது ரஃபேல் படை ஆகிய 101 ‘ஃபால்கன்ஸ் ஆப் சம்ப் மற்றும் அக்னூர்’ (Falcons of Chhamb and Akhnoor) ஐ, மேற்கு வங்காளத்தின் ஹசிமாரா விமானப் படைத் தளத்தில் அவை முறைப்படியாக சேர்க்கப்படுவதற்கு முன்பாக அம்பாலாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

- **பினாகா (PINAKA)**
  - ✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு – ‘பினாகா’ ராக்கெட்டுகள் மற்றும் 122 மிமீ கேலிபர் ராக்கெட்டுகளின் மேம்பட்ட பதிப்பை ஜூன் 24 மற்றும் 25ல் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சோதித்துப் பார்த்தது.

- **அக்னி பிரைம் (Agni Prime)**
  - ✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு – புதிய தலைமுறை அணுசக்தித் திறன் கொண்ட ‘அக்னி பிரைம்’ என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணயை வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.
  - ✓ 1000 கிமீ முதல் 2000 கிமீ தூரம் வரை செல்லும் கண்டம்விட்டு கண்டம் பாயும் மேம்பட்ட இரண்டு நிலை ஏவுகனையானது, ஒடிசா கடற்கரையில் உள்ள பாலசோர் அருகே உள்ள அப்துல் கலாம் தீவில் இருந்து ஒரு இடம் பெயரும் செலுத்து வாகனம் மூலமாக விண்ணில் செலுத்தி சோதித்துப் பார்க்கப்பட்டது.

- **இந்தியா உள்நாட்டு சப்சோனிக் குரூஸ் ஏவுகணையான நிர்பையை (Nirbhay) வெற்றிகரமாக சோதனை செய்தது.**
  - ✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு ‘நிர்பை’ என்ற சப்சோனிக் குரூஸ் ஏவுகனையை ஜூன் மாதத்தில் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சோதித்துப் பார்த்தது.

APPOLO STUDY CENTRE

# பொருளாதாரம்

- **மே மாதத்தில் ஜிஎஸ்டி வசூல் ரூ.1.02 இலட்சம் கோடி**
  - ✓ ஜுன் 5 அன்று வெளியிடப்பட்ட நிதி அமைச்சக அறிக்கையின்படி, மே மாதத்தில் சரக்குகள் மற்றும் சேவை வரி மூலமாக ரூ.1.02 இலட்சம் கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. ரூ.1 இலட்சம் கோடிக்கும் அதிகமாக ஜிஎஸ்டி வரி வசூல் செய்யப்படுவது இது தொடர்ச்சியான எட்டாவது மாதம் என்றபோதிலும், செப்டம்பர் 2020க்குப் பிறகு வசூலிக்கப்பட்ட தொகையில் இது குறைந்த அளவு ஆகும்.

- **நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகளின் குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒன்றிய அரசு அதிகரித்துள்ளது.**
  - ✓ ஒன்றிய அரசு சாதாரண நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை கடந்த ஆண்டின் ஒரு குவிண்டால் விலை ரூ.1868லிருந்து 4 விழுக்காடு அதிகரித்து நடப்பு கரீப் பருவத்திற்கு ரூ.1940க்கு உயர்த்தியுள்ளது.

- **14 கோவிட் நிவாரணப் பொருட்களுக்கான சரக்குகள் மற்றும் சேவை வரியை ஒன்றிய அரசு குறைத்துள்ளது.**
  - ✓ சரக்குகள் மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) கவுன்சில், சனிக்கிழமையன்று கோவிட் -19 மற்றும் மியூக்கோர்மைகோசிஸ் - டோசிலிசுமாப் மற்றும் ஆம்போடெரிசின் பி ஆகிய இரண்டு முக்கிய மருந்துகளுக்கு விதிக்கப்படும் வரியை தள்ளுபடி செய்ய முடிவு செய்தது. அத்துடன் செப்டம்பர் 30 வரை 14 முக்கிய தொற்றுநோய் நிவாரணப் பொருட்களுக்கான வரி விகிதத்தை 5 விழுக்காடு ஆகக் குறைத்தும் அறிவித்துள்ளது.

- **2020ஆம் ஆண்டில், இந்தியாவின் ஜிடிபி விகிதத்துக்கான வங்கி கிரெடிட் 56 விழுக்காடு அளவுக்கு அதிகரித்துள்ளது.**
  - ✓ சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி (Bank for International Settlements) இன் சமீபத்திய தரவுகளின்படி, ஜிடிபி விகிதத்திற்கான இந்தியாவின் வங்கிக் கடன் 2020ஆம் ஆண்டில் 50 விழுக்காடு ஆக அதிகரித்துள்ளது.
  - ✓ ஜிடிபி-க்கான இந்தியாவின் வங்கி கிரெடிட் விகிதம், வளர்ந்து வரும் சந்தை சகாக்களை விட மிகவும் பின்தங்கியுள்ளது. இது ஜி20 சராசரியில் பாதி ஆகும்.

- **தேசிய புள்ளியியல் அலுவலகம் - இந்திய பொருளாதாரம் பற்றிய தரவுகள்**
  - ✓ மே மாதத்தில் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டள்ள தரவுகளின் அடிப்படையில். இந்தியப் பொருளாதாரம் - 2020-21ஆம் ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் முடிய உள்ள காலாண்டில் 1.6 விழுக்காடு உயர்ந்துள்ளது.

- **ஜுன் முதல் வாரத்தில் இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 600 பில்லியன் டாலர்கள் என்ற புதிய எல்லையைத் தொடும் என்று இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்தார்.**
  - ✓ இருப்பினும் அதிகாரபூர்வ தகவல்களின்படி, ஆர்பிஐ வெளியிட்டுள்ள வாராந்திர தகவல்களின்படி, மே 28 அன்று 598.2 பில்லியன் டாலர்கள் கையிருப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவும்கூட உலக சாதனைதான்.

- **‘சென்ட்ரம் நிதியம் (Centrum Finance)**
  - ✓ இந்திய ரிசர்வ் வங்கி – பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டுறவு வங்கிக்கான தீர்மானத்தின் ஒரு பகுதியாக ‘சென்ட்ரம் நிதியத்திற்கு’ கொள்கை அடிப்படையிலான சிறு நிதிய வங்கி உரிமத்தை வழங்கியுள்ளது.

- **உலகளாவிய தரவரிசை முகமையாகிய எஸ் மற்றும் பி (S&P), 2021-22ஆம் நிதி ஆண்டுக்கான இந்தியாவின் வளர்ச்சி முன்னறிவிப்பை, முந்தைய மதிப்பீடான 11 விழுக்காட்டிலிருந்து 9.5 விழுக்காடாக குறைத்து மதிப்பிட்டுள்ளது.**
  - ✓ உள்நாட்டு கடன் தரவரிசை முகமையாகிய கிரிசில் (**Crisil**), 2022ஆம் நிதியாண்டிற்கான (2021-22) ஜிடிபி வளர்ச்சி மதிப்பீட்டை 11 விழுக்காடு என்ற முந்தைய மதிப்பீட்டிலிருந்து 9.5 விழுக்காடாக திருத்தி மதிப்பிட்டுள்ளது. கிரைசிலின் கூற்றுப்படி, இந்தியப் பொருளாதாரம் 21ஆம் நிதி ஆண்டில் 7.3 விழுக்காடு சுருங்கியுள்ளது.
  - ✓ இந்தியாவின் பொருளாதாரம் 2021ஆம் ஆண்டில் 8.3 விழுக்காடும், 2022ஆம் ஆண்டில் 7.5 விழுக்காடும் உயரும் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.
  - ✓ உள்நாட்டு கடன் தரவரிசை முகமை (**domestic credit rating agency**) 2021-22ஆம் நிதி ஆண்டுக்கான இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு வளர்ச்சி வீதம் ஒவ்வொரு ஆண்டும் 22 முதல் 8.5 விழுக்காடாக இருக்கும் என்று மதிப்பிட்டுள்ளது. இது, அடிப்படை விலைகளில் ஒட்டு மொத்த மதிப்பு கூடுதலானது (2011-12 விலைகளில் நிலையான வீதத்தில்) 2022ஆம் நிதி ஆண்டில் 7.3 விழுக்காடு உயரும் என்று எதிர்பார்க்கிறது.

- **இந்தியாவில் பணவீக்கம்**
  - ✓ இந்தியாவின் சில்லறை பணவீக்க விகிதம் மே மாதத்தில் கடந்த 6 மாதத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு, ஏப்ரல் மாதத்தில் 4.23 விழுக்காடு என்ற மூன்று மாத குறைந்தபட்ச தளர்வுக்குப் பிறகு, அதிகமாக 6.3 விழுக்காடு உயர்ந்து இருந்தது. நுகர்வோர் விலை குறியீட்டின் (Consumer Price Index) அடிப்படையிலான பணவீக்கம், ஐந்து மாதங்களுக்குப் பிறகு முதன் முறையாக ரிசர்வ் வங்கியின் இலக்கு வரம்பை மீறியுள்ளது.
  - ✓ கச்சா எண்ணெய் மற்றும் உற்பத்திப் பொருட்களின் விலை உயர்வால், மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் மே மாதத்தில் 12.94 விழுக்காடாக உயர்ந்தது. குறைந்த அடிப்படை விளைவும்கூட, மே 2021ல் மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் அதிகரிப்புக்கு காரணமாக இருந்திருக்கிறது.
  - ✓ இந்திய தொழில் கூட்டமைப்பு (Confederation of Indian Industry) நடப்பு நிதியாண்டில் அதாவது நிதியாண்டு 2021-22ல், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 9.5 விழுக்காடாக அதிகரிக்கும் என்று மதிப்பிட்டுள்ளது.

# தரவரிசைப் பட்டியல்

- **உலக கொடுக்கல் அட்டவணை 2021 (World Giving Index 2021)**
  - ✓ இந்தியா – தொண்டு உதவி அறக்கட்டளை (Charities Aid Foundation) வெளியிட்ட உலக கொடுக்கல் அட்டவணை 2021ன் 10வது பதிப்பில் மொத்தம் உள்ள 114 நாடுகளில் இந்தியா 14வது இடத்தில் உள்ளது.

- **நிலையான வளர்ச்சி – அறிக்கை 2021**
  - ✓ பின்லாந்து – ஆண்டு நிலையான வளர்ச்சி அறிக்கை 2021ல் முதலிடம் பிடித்துள்ளது.
  - ✓ இந்த நிலையான வளர்ச்சி இலக்கு அட்டவணையில் ஒரு நார்டிக் நாடு முதலிடம் பிடித்திருப்பது இதுவே முதல்முறை ஆகும்.
  - ✓ நிலையான வளர்ச்சி இலக்கு அட்டவணை மற்றும் டேஷ்போர்டுகளை ஐ.நா. நீடித்த வளர்ச்சி இலக்குகள் வலையமைப்பு மற்றும் பெர்டெல்ஸ்மன் ஸ்டிஃப்டங்-ஐ சேர்ந்த வல்லுநர்கள் தயாரித்துள்ளனர்.
  - ✓ நிலையான வளர்ச்சிக்கான 2030 திட்டத்தை நாடுகள் எவ்வாறு செயல்படுத்துகின்றன என்பதை இது ஒப்பு நோக்குகிறது.
  - ✓ நீடித்த வளர்ச்சி அறிக்கை 193 நாடுகளின் செயல்பாடுகள் மற்றும் முனைப்புகளைக் கருத்தில் கொள்கிறது.
  - ✓ மார்ச் 2021ல் வெளியிடப்பட்ட உலக மகிழ்ச்சி அறிக்கையின்படி, உலகிலேயே மிகவும் மிகழ்ச்சிகரமான நாடு என்ற இடத்தையும் பின்லாந்து பெறுகிறது.

- **இந்தியா – 2030 நிரலின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளில் 117வது இடத்தில் உள்ளது.**
  - ✓ இது இந்தியாவின் சுற்றுச்சூழல் நிலை அறிக்கை 2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - ✓ கடந்த ஆண்டு இந்தியா 115வது இடத்தில் இருந்தது, நிலையான வளர்ச்சி இலக்குகள் 2, 5 மற்றும் 9ல் செயலாற்றாமை காரணமாக 2 இடங்கள் தாழ்ந்து 117வது இடத்தில் உள்ளன.
  - ✓ பூட்டான், நேபாளம், இலங்கை மற்றும் வங்காளதேசம் ஆகிய நான்கு தெற்காசிய நாடுகளுக்கும் கீழே இந்தியா வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
  - ✓ இந்தியாவின் ஒட்டு மொத்த நிலையான வளர்ச்சி இலக்கு மதிப்பெண் மொத்தம் உள்ள 100ல் 61.9 ஆகும்.

- **வாழத்தகுந்த நகரங்கள் அட்டவணை 2020ல் மிகச் சிறந்த நகரமாக பெங்களூரு தேர்வு செய்யப்பட்டுள்ளது.**
  - ✓ அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, வாழத் தகுந்த நகரங்கள் குறியீடு 2020ல் மிகச் சிறந்த நகரமாக பெங்களூரு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - ✓ 'வாழத்தகுந்த நகரங்கள் அட்டவணை 2020' என்பது 'இந்தியாவின் சுற்றுச் சூழல் நிலை 2021' என்ற தலைப்பிலான அறிக்கையின் ஒரு பகுதி ஆகும்.

    தரவரிசை 1: பெங்களூரு

    தரவரிசை 2: சென்னை

    தரவரிசை 3: சிம்லா

    தரவரிசை 4: புவனேஷ்வர்

    தரவரிசை 5: மும்பை

# நியமனங்கள்

| பெயர் | துறை |
|---|---|
| திரு. ஹசன் மொஹம்மது ஜின்னா | மாநில அரசு இவரை மாநில அரசு வழக்குறைஞராக நியமித்தது. |
| திரு. ஜெயரஞ்சன் | முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், இவரை மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் (State Development Policy Council) துணைத் தலைவராக நியமித்தார். |
| லெப்டினண்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே | கோல்கத்தாவில் உள்ள கிழக்கத்திய கமாண்டின் இராணுவத் தலைவராக நியமிக்கப்பட்டார். |
| அப்துல்லா ஷாஹித் | மாலத் தீவின் வெளியுறவுத் துறை அமைச்சர், ஐநா பொது சபையின் 76வது அமர்வில் புதிய தலைவராக உள்ளார். |
| நெப்தாலி-பென்னெட் | இஸ்ரேலின் 13வது பிரதமராக நியமிக்கப்பட்டார். இவர் இஸ்ரேல் பிரதமராக 12 ஆண்டு காலம் பதவி வகித்த முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவுக்குப் பதிலாக பதவி ஏற்றுள்ளார். |
| சத்யா நாடெல்லா | மைக்ரோசாப்டின் தலைமைச் செயல் அலுவலர் - அதன் தலைவராக பதவி உயர்வு பெற்றுள்ளார். |
| அந்தோனியோ கட்டரெஸ் | ஐநா பொதுச் சபை - இரண்டாவது முறையாக ஐ.நா தலைமைச் செயலாளராக தேர்ந்தெடுத்தது. |
| ரெபேகா கிரின்ஸ்பான் | ஐ.நா. பொதுச் செயலாளர் - பொருளாதார வல்லுநராகிய கோஸ்டா ரிகான்-ஐ வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐ.நா மாநாட்டின் (UN Conference on Trade and Development) பொதுச் செயலாளராக தேர்வு செய்தார். |

# விருதுகள்

- **ஆஸ்டுவாரிஸ் இளவரசி விருது (Princess of Asturias Award)**
  - ✓ இந்திய பொருளாதார வல்லுநரும் நோபல் பரிசு வென்றவருமாகிய அமர்த்திய சென் - சமூக அறிவியல் பிரிவில் அஸ்டுவாரிஸ் இளவரசி விருது வழங்கப்பட்டார்.
  - ✓ 20 நாடுகளிலிருந்து 41 போட்டியாளர்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டியில், 'ஏழ்மை மற்றும் பட்டினி' (**Poverty and Famines**) என்ற அவரது படைப்புக்காக, ஸ்பெயினின் இந்த உயரிய விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
  - ✓ பாராட்டைப் பெற்றுள்ள இந்தப் புத்தகத்தில், சென் இவ்வாறு தெரிவித்துள்ளார், "பட்டினி என்பது உணவு கிடைக்காமையினால் விளைந்தது அல்ல, ஆனால், உணவு பகிர்தலில் காணப்படும் சமமின்மை காரணமாகவே இது விளைகிறது"

- **புலிட்சர் பரிசு (Pulitzer Prize)**
  - ✓ **பஜ் ஃபீட் நியூஸ்** (BuzzFeed News) **என்ற ஒரு பத்திரிகையின், இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட பத்திரிகையாளராகிய மேகா ராஜகோபாலன் அவர்கள்,** அலிசன் கில்லிங் மற்றும் கிறிஸ்டோ ஆகியோருடன் இணைந்து – சர்வதேச அறிக்கையிடல் பிரிவில் அமெரிக்காவின் சிறந்த பத்திரிகையாளருக்கான 'புலிட்சர் பரிசு' என்ற விருதை வென்றுள்ளார்.

- **புகழ்பெற்ற பத்திரிகையாளராகிய பி. சாய்நாத் - ஃபுகுவோகா பரிசு (Fukuoka Prize) 2021ஐ வென்ற மூன்று பேரில் ஒருவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**
  - ✓ கிராமப்புற இந்தியா பற்றிய தன்னுடைய எழுத்துக்கள் மற்றும் வர்ணனைகள் மூலமாக ஒரு புதிய அறிவை உருவாக்கியதற்காகவும், 'சிவில் கூட்டுறவை ஊக்குவித்ததற்காகவும்' சாய்நாத்துக்கு, இந்த விருது வழங்கப்பட்டது.
  - ✓ ஆசிய கலாச்சாரம் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்காகவும், ஆசிய மக்களிடையே பரிமாற்றம் மற்றும் பரஸ்பர கற்றலை எளிதாக்குவதற்காகவும் பாடுபடும் தனித்துவமான நபர்களுக்கு இந்த ஃபுகுவோகா பரிசு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
  - ✓ இந்த உயரிய பரிசு இதற்கு முன்னதாக வங்காளதேசத்தைச் சேர்ந்த முகம்மது யூனுஸ், வரலாற்று ஆசிரியர் ரொமிலா தாப்பர், மற்றும் சரோத் மாஸ்ட்ரோ அம்ஜத் அலி காண் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **கோவில் நகரம் இந்தியா சீர்மிகு நகரங்கள் விருது போட்டி – 2020ல் ஐந்து இடங்களைப் பெற்றது.**
  - ✓ திருப்பதி சீர்மிகு நகரம் இரண்டு பிரிவுகளில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. அத்துடன் இந்தியா சீர்மிகு நகரங்கள் விருது போட்டிகள் (India Smart Cities Award Contest) - 2020ல் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களையும் பிடித்துள்ளது.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

- **வரலாற்று ஆசிரியரான விக்ரம் சம்பத் 'சாவர்க்கர்' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.**
  - ✓ ஜுலை 2021ல் ஒரு போட்டியிட்ட மரபு (contested Legacy) (1924-1966) ஸ்டாண்டுகளுக்கு வர உள்ளது.
  - ✓ புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரும் எழுத்தாளருமாகிய விக்ரம் சம்பத், வீர சவர்க்காரின் வாழ்க்கை வரலாற்றின் இரண்டாவது மற்றும் கடைசி தொகுப்பை 'சாவர்க்கர்' என்ற தலைப்பில் எழுதியுள்ளார்.

- **உலகத்தில் ஒரு இல்லம் (Home in the World) - அமர்த்திய சென்னின் ஒரு நினைவுக் குறிப்பு**
  - ✓ நமது வாழ்நாள் காலத்தின் உலகின் முன்னணி பொது அறிவுஜீவிகளில் ஒருவரும் நோபல் பரிசு வென்றவருமாகிய அமர்த்திய சென் தன்னுடைய நினைவுக்குறிப்பை 'உலகத்தில் ஒரு இல்லம்' என்ற தலைப்பில் எழுதியுள்ளார்.

# புகழ்பெற்ற நபர்கள்

- **எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதலாவது பார்வையற்ற சீன மலையேற்ற வீரர்**
  - ✓ 46 வயதான சீனாவின் ஜாங் ஹாங் (Zhang Hong) உலகின் மிக உயரமான சிகரத்தை நேபாளத்தின் பக்கதில் இருந்து ஏறி, இந்த சாதனையை எட்டிய ஆசியாவின் முதலாவது மற்றும் உலக அளவில் மூன்றாவது பார்வையற்ற மலையேற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.
  - ✓ ஜாங், 8,849 மீட்டர் உயரம் உள்ள இமயமலை சிகரத்தை மே 24 அன்று மூன்று உயர் ஆல்டிடியூட் வழிகாட்டிகளுடன் அடைந்து, மீண்டும் தரை முகாமை வந்தடைந்தார்.

- **ஹாங்காங்கின் மலையேற்ற வீரர், சாங் யின்-ஹங் (Tsang Yin-hung)** – எவரெஸ்ட் சிகரத்தை வெறும் 26 மணி நேரங்களில் சென்றடைந்த முதலாவது பெண் வீராங்கனை என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
- **மாவ்யா சுதன் என்ற பறக்கும் அலுவலர்** - இந்திய விமானப் படையின் போர் பிரிவில் நியமிக்கப்பட்ட 12வது பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

- **உலக சுகாதார நிறுவனம் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு புதிய வகை கோவிட்-19 மாறுபாடுகளுக்கு 'கப்பா' மற்றும் 'டெல்டா' என்று பெயரிட்டுள்ளது.**
  - ✓ ஐநா சுகாதார முகமையாகிய, உலக சுகாதார நிறுவனம், இந்தியாவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு புதிய வகை கோவிட்-19 மாறுபாடுகளுக்கு எளிதில் சொல்லக்கூடிய இரண்டு பெயர்களை வைத்துள்ளது.
  - ✓ அந்த இரண்டு வகை மாறுபாடுகள் பி.1.617.1 மற்றும் பி.1.617.2
  - ✓ பி.1.617.1 வகை கோவிட்-19 மாறுபாட்டிற்கு 'கப்பா' என்றும், பி.1.617.2 வகை கோவிட் 19 மாறுபாட்டிற்கு 'டெல்டா' என்றும் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

- **நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி – 'என்ஜிசி 691' எனப்படும் சுழல் விண்மீனின் புகைப்படத்தை எடுத்துள்ளது.**
  - ✓ நெபுலாக்களின் புதிய பொது பட்டியல் மற்றும் நட்சத்திரங்களின் சொத்துகள்
  - ✓ ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியானது இதுவரை செயல்பாட்டில் உள்ள மிகப்பெரிய மற்றும் பல்துறை தொலைநோக்கி ஆகும்.

- **∴பெங்கியுன்-4பி (Fengyun-4B) செயற்கைக் கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.**
  - ✓ சீனா – சீனா சமீபத்தில் சிச்சுவான் (Sichuan) மாகாணத்தில் உள்ள ஜிசாங் (Xichang) செயற்கைக் கோள் செலுத்து நிலையத்திலிருந்து, ∴பெங்கியுன்-4பி செயற்கைக் கோளை லாங் மார்ச் 3பி ராக்கெட் மூலமாக வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

- **என்விஷன் (Envision)**
  - ✓ ஐரோப்பிய விண்வெளி முகமை – வீனஸ் கோளை ஆய்வு செய்வதற்காக, ஒரு புதிய புலனாய்வு செயற்கைக் கோள் 'என்விஷன்'ஐ 2030 வாக்கில் அனுப்ப உள்ளதாக சமீபத்தில் அறிவித்துள்ளது.
  - ✓ என்விஷன் செயற்கைக் கோளானது, வீனசை சுற்றி வந்து, அதன் உள்மையத்திலிருந்த மேல் வளிமண்டலம் வரை ஆய்வு செய்து பூமியிலிருந்து அது எவ்வாறு தோன்றியிருக்கக் கூடும் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அனுபபி வைக்கப்படுகிறது.

- **விசா உட்சாட் (WISA Woodsat)**
  - ✓ 'விசா உட்சாட்' என்று அழைக்கப்படும் உலகின் முதலாவது மர செயற்கைக் கோள் - 2021ஆம் ஆண்டின் இறுதியில் நியூசிலாந்திலிருந்து விண்ணில் செலுத்தப்படும்.

- **'ஹீலியோஸ்பியர்' என்று அழைக்கப்படும் விண்மீன்களுக்கு இடையேயான இடைவெளி**
  - ✓ ஹீலியோஸ்பியர் என்பது சூரிய காற்றினால் உருவாக்கப்பட்ட ஒரு பாதுகாப்பு குமிழி ஆகும். இது சூரியனிலிருந்து வெளிப்படும் ஒரு நிலையான காந்தப்புலம் மற்றும் துகள்களைக் கொண்டதாகும்.

- **'மெய்நிகர் தண்ணீர் பகுப்பாய்வு**
  - ✓ கௌஹாத்தி இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் - 'மெய்நிகர் நீர் பகுப்பாய்வு' என்ற கருத்தைப் பயன்படுத்தி சிறந்த நீர்மேலாண்மை கொள்கைகளை முன்மொழிந்துள்ளனர்.

# விளையாட்டுகள்

➢ துபாயில் நடைபெற்ற 2021 ஏஎஸ்பிசி ஆசிய குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டிகளில், இந்தியாவின் புகழ்பெற்ற குத்துச் சண்டை வீராங்கனையாகிய மேரிகோம், கஜகஸ்தானின் இரண்டுமுறை உலக சாம்பியனாகிய நாசிம் கைசபாயிடம் தோற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

➢ ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில், இந்தியாவின் ரஹி சர்னோபாட் தங்கப் பதக்கத்தை வென்றார்.

➢ நடைபெற்று வரும் போட்டியில் ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் இவரே ஆவார். இவர் மொத்தம் உள்ள 600 புள்ளிகளில் 591 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

➢ **பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி 2021யில் வெற்றி பெற்றவர்கள்**
  ✓ ஆடவர் ஒற்றையர் : நொவக் ஜொகோவிக் (செர்பியா)
  ✓ மகளிர் ஒற்றையர் : பார்போரா கிரெக்சிகோவா (செக் குடியரசு)
  ✓ நொவாக் ஜொகோவிக் (செர்பியா) வைப் பொறுத்தவரையில், இது அவருடைய 19வது கிராண்ட் ஸ்லாம் பட்டமும், இரண்டாவது பிரெஞ்ச் ஓபன் பட்டமும் ஆகும்.
  ✓ ரோஜர் பெடரர் மற்றும் ர.ஃபேல் நடால் (20) பெரும்பாலான கிராண்ட் ஸ்லாம் ஆடவர் ஒற்றையர் போட்டிகளில் முதல் இடத்தில் இருந்துள்ளனர்.
  ✓ ஜொகோவிக்குக்கு, ஆறுமுறை சாம்பியனான புகழ்பெற்ற ஸ்வீட் பிஜான் போர்க் (Swede Bjorn Borg) கூ டிஸ் மாஸ்கீடேர்ஸ் (Coupe des Mousquetaires) பட்டத்தை வழங்கினார்.

➢ **கிறிஸ்டியானோ ரொனால்டோ – ஆடவர் கால் பந்தாட்டப் போட்டிகளில் பெரும்பாலான சர்வதேச கோல் ரெக்கார்டுகளை சமன் செய்தார்.**
  ✓ 36 வயதான ரொனால்டோ ஜுன் 23 அன்று பிரான்சுக்கு எதிரான யூரோ 2020 ஆட்டத்தில் போர்ச்சுகலுக்காக தனது 109வது கோலை அடித்து ஈரானின் முன்னாள் ஸ்ட்ரைக்கர் மற்றும் ஆசிய கால்பந்து ஜாம்பவான் ஆகிய, அலிடேயின் அனைத்து நேர சர்வதேச சாதனைகளையும் சமன் செய்தார்.

➢ **இந்திய வில்வித்தை வீராங்கனையாகிய. தீபிகா குமாரி – ஜுன் மாதம் பாரிசில் நடைபெற்ற வில்வித்தை உலகக் கோப்பை மூன்றாம் கட்டத்தில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்று உலக அளவில் முதலிடத்தைப் பிடித்தார்.**

➢ **மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த, ஆல்ரவுண்டராகிய அன்ஷுலா ராவ் - ஊக்க மருந்து சோதனையில் தோல்வி அடைந்ததால், தேசிய ஊக்க மருத்து தடுப்பு அமைப்பின் (National Anti Doping Agency) குழுவால் நான்கு வருட தடை விதிக்கப்பட்டார். இவ்வாறு தடை விதிக்கப்பட்ட முதல் பெண் கிரிக்கெட் வீரர் இவர் ஆவார்.**

# நினைவில் நின்றவர்கள்

- **மில்கா சிங்**
  - ✓ நான்கு முறை ஆசிய போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவராகிய மில்கா சிங் (90 வயது) – கோவிட்-க்குப் பிந்தைய சிக்கல்கள் காரணமாக சண்டிகரில் உள்ள மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி முதுகலை நிறுவனத்தில் (Post Graduate Institute of Medical Education and Research) ஜுன் 18 அன்று காலமானார்.

- **எஸ். இளையராஜா (43 வயது)**
  - ✓ தத்ரூப ஓவியர் - கோவிட் தொடர்பான சிக்கல்கள் காரணமாக சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் காலமானார்.

- **சொர்ணம்**
  - ✓ புகழ்பெற்ற பத்திரிகையாளரும், தமிழ் திரைப்பட வசனகர்த்தாவும் இயக்குநருமாகிய கே. சொர்ணம் - சிறிது காலம் உடல்நலமின்றி இருந்து ஜுன் 8 அன்று தன்னுடைய 88 ஆவது வயதில் காலமானார்.
  - ✓ ஸ்வர்ணம் அல்லது ஸ்வொர்ணம் என்று திரைகளில் தோன்றும் சொர்ணம் எம்ஜிஆரின் 'நம் நாடு' மற்றும் 'அடிமைப் பெண்' போன்ற 17 படங்களுக்கு கதை வசனங்களை எழுதியுள்ளார்.
  - ✓ அவர் இளைய சூரியன் என்ற பத்திரிகையின் தலைமை ஆசிரியராக இருந்தார் மற்றும் 'முரசொலி' செய்தித்தாளின் வாராந்திர இணைப்பாக வெளிவரும் 'புதையல்'இன் பொறுப்பு ஆசிரியராகவும் இருந்தார்.
  - ✓ 2005ஆம் ஆண்டு சொர்ணம் கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
  - ✓ சொர்ணம் மாநில அரசு அமைப்பாகிய இயல் இசை நாடக மன்றத்தின் செயலாளராக இருந்ததோடு அன்றி. சென்னையில் உள்ள திரைப்படக் கல்லூரியின் தலைவராகவும் இருந்தார்.

- **புகழ்பெற்ற சுற்றுச்சூழல் ஆர்வலரும் பத்மஸ்ரீ விருதை வென்றவருமாகிய ராதா மோகன் காலமானார்**
  - ✓ பத்மஸ்ரீ விருது பெற்ற புகழ்பெற்ற பொருளாதார நிபுணரும் சுற்றுச் சூழல் நிபுணருமாகிய பேராசிரியர் ராதாமோகன்ஜி காலமானார், அவருக்கு வயது 78.

# அறிக்கைகள்

- **கோர்பிவாக்ஸ் (Corbevax) – விலை குறைவான தடுப்பூசி மருந்து இந்தியாவில் கிடைக்கும்.**
  - ✓ ஈ உயிரியல் நிறுவனத்தில் (Biological E's) கோர்பிவாக்ஸ் தடுப்பூசி – நாட்டில் அனைவருக்கும் கிடைக்கக் கூடிய வகையில் விலை குறைவான தடுப்பூசி மருந்தாக கிடைக்க உள்ளது.

- **'2021ஆம் ஆண்டு வறட்சி பற்றிய உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கை**
  - ✓ 'கடுமையான வறட்சி நிலவுவதன் காரணமாக இந்தியாவின் ஒட்டு மொத்த உள் நாட்டு உற்பத்தி (GDP) ஆண்டுக்கு 2-5 விழுக்காடு குறையும் என்று இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது.
  - ✓ அதற்கேற்ப, தமிழ்நாட்டில் சமீபத்தில் நிலவிய முக்கியமான வறட்சிகள் முதன்மைத் துறையில் 20 விழுக்காடு உற்பத்திக்குக் காரணமாக இருந்துள்ளன. இதன் காரணமாக தொழில் துறையில் 5 விழுக்காடும், சேவைத் துறையில் 3 விழுக்காடும் சரிவு ஏற்பட்டுள்ளது.

APPOLO STUDY CENTRE

# முக்கிய தினங்கள்

| தினம் | மையக்கருத்து | முக்கியத்துவம் |
|---|---|---|
| **ஜூன் 1**<br>**உலக பால் தினம்** | ஊட்டச் சத்து பற்றிய செய்திகளுடன் பால்வளத் துறையில் நிலைத் தன்மை | ➢ இந்தியாவில் பால் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்குக் காரணம் . டாக்டர் வர்கீஸ் குரியன்.<br>➢ இந்தியாவில் 1970ஆம் ஆண்டு டாக்டர். வர்கீஸ் குரியனால் வெண்மைப் புரட்சி தொடங்கி வைக்கப்பட்டது. |
| **ஜூன் 3**<br>**உலக மிதிவண்டி தினம்** | மிதி வண்டியின் தனித்தன்மை, பன்முகத் தன்மை மற்றும் நீண்ட ஆயுள் ஆகியவை எளிமையான, நிலையான, சிக்கமான மற்றும் நம்பகமான போக்குவரத்து முறையாகும். | இந்த நாளானது தூய்மையான சுற்றுச் சூழலுக்கும், சுகாதாரமான வாழ்க்கை முறைக்கும் மிதி வண்டியின் பயன்பாட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஜூன் 5**<br>**உலக சுற்றுச் சூழல் தினம்** | உலக சுற்றுச் சூழல் நாள் முழக்கம் - "மறுஉருவாக்கம், மறுசீரமைத்தல், மீட்டமைத்தல் - சேதத்தை மாற்றியமைத்து நமது சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதில் கவனம் செலுத்துவோம்." | இந்த ஆண்டு உலக சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி, உலக சுகாதார அமைப்பு, 'ஐநா சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டமைத்தல் (2021-2030) பத்தாண்டுகள்'இல் சேர்ந்துள்ளது. |
| **ஜூன் 8**<br>**உலக பெருங்கடல் தினம்** | பெருங்கடல் : வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் | பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கடலில் மனித நடவடிக்கைகளின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் அவற்றைப் பாதுகாக்கும் உறுதிமொழியை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஜூன் 12**<br>**உலக குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினம்** | இப்போதே செயல்படுவோம் : குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்போம் | - |
| **ஜூன் 17**<br>**பாலைவனமாக்கல் மற்றும் வறட்சியை எதிர்த்துப் போராடுவதற்கான உலக தினம்** | மீட்டமைத்தல், நிலம், மீட்பு. நல்ல நிலத்தைக் கொண்டு நாம் மறுகட்டுமானம் செய்வோம் | - |
| **ஜூன் 21** | நல்ல உடல் நலத்திற்காக | - |

| தினம் | மையக்கருத்து | முக்கியத்துவம் |
|---|---|---|
| **சர்வதேச யோகா தினம்** | யோகா | |
| **ஜுன் 23**<br>**சர்வதேச ஒலிம்பிக் தினம்** | இந்த நெ.1 ஒலிம்பிக் தின நாளையொட்டி, நாம் சுகாதாரமாக, வலிமையாக, சுறுசுறுப்புடன் இருப்போம். | - |
| **ஜுன் 25**<br>**சர்வதேச கடற்படையினர் தினம்** | கடற்படையினர்: கப்பல் கட்டுதலின் எதிர்காலத்தின் மையத்தில். | - |
| **ஜுன் 26**<br>**சர்வதேச போதைப் பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம்** | போதைப் பொருள் பற்றிய விவரங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள், உயிர்களைக் காப்பாற்றுங்கள் | - |
| **ஜுன் 29**<br>**தேசிய புள்ளியியல் தினம்** | பட்டினியை ஒழிப்போம், உணவு பாதுகாப்பு, மேம்பட்ட ஊட்டச்சத்து மற்றும் நிலையான வேளாண்மையை (ஐநாவின் நீடித்த வளர்ச்சி இலக்கு எண்.2) அடைவோம். | - |